### அதிகாரம் 15

# ஆபிரகாமுடன் தேவனுடைய நில உடன்படிக்கை

ஆபிரகாம் கிழக்கத்திய அரசர்களை வென்ற பின்னர், சோதோமின் அரசரையும், அரசரும் ஆசாரியருமாகிய மெல்கிசேதேக்கையும் எப்போது சந்தித்தார் என்பதனை குறித்து எவ்வித உறுதியான தகவலும் கிடையாது. கால இடைவெளி எவ்வளவாக இருப்பினும், 13:14-17 வரை அமைதியாக இருந்த குரல் மீண்டும் இந்த மூதாதையோடு பேசியது.

## தேவ வாக்குத்தத்தங்களும் விசுவாசத்தின் மறுமொழியும் (15:1-6)

**[1]இந்தக் காரியங்கள் நடந்த பின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும் உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார். [2]அதற்கு ஆபிராம்: கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளை யில்லாமல் இருக்கிறேனே; தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இருக்கிறானே என்றான். [3]பின்னும் ஆபிராம்: தேவரீர் எனக்குப் புத்திரசந்தானம் அருளவில்லை; இதோ என் வீட்டிலே பிறந்த பிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாய் இருக்கிறான் என்றான். [4]அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி: இவன் உனக்குச் சுதந்தரவாளியல்ல, உன் கர்ப்பப்பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான் என்று சொல்லி, [5]அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார். [6]அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்.**

**வசனம் 1. கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி** எனும் சொற்றொடர், ஒரு செய்தியையோ ஒரு **தீர்க்கதரிசனத்தையோ** அல்லது ஒரு தீர்க்கத்தரிசிக்கு அறிமுகப் படுத்துவதைப் போன்ற முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது (எரே. 1:2; எசே. 1:3; ஓசியா 1:1; யோனா 1:1). ஆண்டவர் ஒரு தரிசனத்தையோ அல்லது சொப்பனத்தையோ பயன்படுத்தி மூதாதையரோடும் அவர்களது எதிரிகளோடும் தொடர்பு கொள்ள பயன்படுத்தினார் (20:3, 6; 28:12; 31:10, 11, 24; 37:5-10; 46:2).

20:7ல் ஆண்டவர் ஆபிரகாமை ஒரு "தீர்க்கதரிசியாக" குறிப் பிட்டிருக்கிறார். இந்த சொல் அடிக்கடி தவறாக புரிந்து கொள்ளப் பட்டிருக்கிறபடியினால் இதனை விளக்குதல் அவசியமாகிறது. "தீர்க்கதரிசி" என்பதின் பொதுவான எபிரெயப் பதம் (נָבִיא, *nabi'*) நபி என்பதாகும், அது "பிரதிநிதி,"[1] அதாவது பிறர் சார்பில் பேசுகிறவர் என்பதனை பொருள்படுத்துகிறது. எகிப்திற்கு மீண்டும் திரும்ப வேண்டும் என மோசேயை ஆண்டவர் அழைக்கும் சம்பவத்தில் இந்த உவமை காணப்படுகின்றது. தனக்களிக்கப்பட்ட தெய்வீக கட்டளையிலிருந்து தப்பிக்க தான் வாக்கில் வல்லவர் அல்ல என மோசே சாக்குப் போக்கு கூறினார். எப்படியாயினும் மோசேயின் தயக்கத்தினால் ஆண்டவர் பின்னடையவில்லை. இரண்டு வெவ்வேறு நிகழ்வுகளில் அவர் தமது வாக்கை மோசேக்கு அளிப்பதாக வாக்குப்பண்ணினார். மேலும் மக்களோடும் பார்வோனோடும் பேசுகையில் அவரது உடன் பிறந்தவராகிய ஆரோன் அவருக்கு "வாயாக" இருந்து அல்லது "தீர்க்கதரிசியாக" செயல்படுவார் (யாத். 4:15, 16; 7:1, 2). என அதனை ஆரோனுடன் தொடர்பு படுத்தினார்.

வேதத்தின் அடிப்படையிலான தீர்க்கதரிசி என்பவர் எதிர்காலத்தை குறித்து மட்டுமே பேசுகிறவராக இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல, அவர் "முன்னும் பின்னுமாக" பேசுகிறவராகவும் அல்லது வசனங்களை பிரசங்கிக்கிறவராகவும் இருக்கிறார். எப்படியாயினும் ஆண்டவருடைய தீர்க்கதரிசி சில சமயங்களில் எதிர்காலத்தை குறித்து தண்டனை உரைப் பவர்களாகவும் "அல்லது நம்பிக்கை வாக்கு உரைப்பவர்களாகவும்" இருந்தனர். மேலும் ஆண்டவரைக் குறித்து பிரசங்கிப்பது அல்லது போதிப்பது, ஆண்டவர் யார், அவர் தமது மக்களை ஆசீர்வதிப்பதற்கு என்ன செய்கிறார் என்பதைக் குறித்து எடுத்துரைப்பதே அவர்களது முக்கிய பணியாக இருந்தது. மேலும் அவர் மக்களை நியாயந்தீர்க்கிறார், அவர்களது சொற்கள் மற்றும் செயல்களுக்கு அவர்களை பொறுப்பாளியாக்குகிறார் என்பதனை அறிவிப்பதும் அவர்களது பணியாக இருந்தது. ஆபிரகாம் தனக்கு கிழக்கத்திய அரசர்களின் மேல் வெற்றி தந்த மெய்யான ஆண்டவராகிய உன்னதமான யாவே அவர்களை சாட்சியிட்டதினால் (14:22-24) அவர்

உண்மையில் ஒரு தீர்க்க தரிசியாக அவருடைய செயல்களை நிறைவேற்றினார்.

ஆண்டவர் அவரது **கேடகமாக** இருப்பதனால் அவர் ஆபிரகாமை **பயப்பட** வேண்டாமெனக் கடிந்துக் கொண்டார் (காண்க உபா. 33:29; 2 சாமு. 22:3, 31; சங். 3:3; 7:10; 84:11). மேலும் அவரது **ஆசீர்வாதம் மிகப் பெரியதாக** இருக்குமென அவருக்கு வாக்குப்பண்ணினார். இங்கே ஆபிரகாம் ஏன் பயப் பட்டாரென்பதனைக் குறித்து எவ்விதமான பதிவுகளும் இல்லை. அவரது பகைவர்கள் மறுபடியும் அவரோடு இரண்டாம் முறையாக போரிடக் கூடுமென்பதற்காக பயந்திருக்கக்கூடும் என சிலர் கருத்துக் கூறுவதுண்டு, ஆனால் ஆபிரகாமின் தனிப்பட்ட இராணுவம் மற்றும் மூன்று எமோரிய உடன்பிறப்புகளின் மூலம் ஏற்பட்ட தீர்க்கமான தோல்வியின் பிறகு அவர்கள் மீண்டும் திரும்பினதாக தெரியவில்லை. வேறு சிலர் ஆண்டவரின் தோற்றம் ஆபிரகாமிற்கு அச்சுறுத்துவதாக இருந்ததென கூறுவதுண்டு (15:12), பிற்பாடு ஆண்டவரால் அறிவிக்கப்பட்ட மீட்பின் செய்திகள் அவருடைய மக்களுக்கு அவர்களின் துணிவை இழந்துப்போவதற்கு ஏதுவாக இருந்தது (21:17; 26:24; 43:23; 46:3; யாத். 3:6). ஆண்டவருடைய சமூகம் விசுவாச பெரு மக்களின் இதயங்களில் பயத்தை ஏற்படுத்தியிருந்தாலும், 12 மற்றும் 21 ஆகிய வசனங்களில் சூரியன் மறைகையில் ஆபிரகாமிற்கு ஏற்பட்ட தரிசனத்தை வசனம் 1ல் ஏற்பட்ட பயத்துடன் இணைத்துக் கொண்துடன் இணைத்துக் கூறுவதற்கு நமக்கு எவ்விதமான முகாந்திரமும் இல்லை.

அவருக்கு பிள்ளையில்லாத பெருங்குறையொன்று அவருடைய இதயத்தை நெடு நாளாக அழுத்திக் கொண்டிருந்ததை இந்த பயத்தை தொடர்புபடுத்தி பார்த்தால் இவ்வசனத்தின் இயல்பான புரிதலை அளிக்கும்: அவருக்கு சரீரபிரகாரமான சுதந்திரவாளி இல்லாமல் இருந்தது. ஆண்டவர் அவருக்கு தாம் "கேடமாகவும்" மற்றும் "பரிசு" அளிப்பவராகவும் உறுதிப்படுத்துகையில், ஆபிரகாம் தன்னை தொல்லைப்படுத்திக்கொண்டிருந்த அந்தப் பாரத்தினை உளறி கொட்டினார். ஒருவேளை ஆபிரகாம் "ஆண்டவர் கானான் நாட்டினை எனக்கு வாக்குப்பண்ணி இருப்பதும், என் பகை வரிடமிருந்து என்னை பாதுகாத்ததும், மந்தைகளாலும், மாடுகளாலும் மற்றும் செல்வ வளங்களாலும் என்னை செறி வூட்டியிருப்பதும் வியத்தகு செயலாக இருப்பினும், ஆனால் என் செல்வ வளங்களை உரிமைப் போராக்கிக் கொள்ள எனக்கொரு மகன் இல்லாவிடில் அதனால் என்ன முடிவு?" எனும் இந்த சிந்தனை யோட்டத்தில் வாழ்ந்திருக்க வேண்டும். ஆகவே "பயப்படாதே" என ஆபிரகாமிற்கு ஆண்டவர் கூறுவது ஆறுதல் படுத்தும் சொல்லாகவும், சாராள் பிள்ளையற்று அவர்கள் வயது முதிர்ந்தவர்களாக இருப்பினும் தங்கள் ஆசீர்வாதங்களுக்கு உரிமைப்

பேறாக ஒரு மகனை பெற்றெடுப்பார்கள் எனும் உறுதி மொழியினை மறுபடியும் உறுதிப்படுத்துவதாகவும் இருந்தது (15:4, 5 பார்க்க).

**வசனம் 2.** அப்போது இளைஞனாக, ஊர் எனும் பட்டணத்தை விட்டு புறப்படுகையில் உன்னை பெரிய ஜாதியாக்குவேன் எனும் அவருடைய வாக்குத்தத்தம், உன் வித்தின் மூலம் (குறிப்பாக சந்ததி), கிறிஸ்து; காண்க கலாத்தியர் 3:16 உலகின் அனைத்து இனங்களையும் ஆசீர்வதிப்பேன், கானான் நாட்டை உனக் களிப்பேன் என ஆண்டவர் வாக்களித்து கூறி ஆண்டுகள் பல சென்றுவிட்டது (11:31; 12:1-3; 13:15, 17; 15:7).[2] பல இனங்களின் வருங்கால தந்தை தனக்கு சாராளின் மூலம் குழந்தை பிறக்குமெனும் நம்பிக்கையினை இழந்து கொண்டிருந்தார். எனவே இறுதியில் தமது வேதனையை **ஆண்டவரிடம்** வெளிப்படுத்திவிட்டார்: அவரது ஆழ்ந்த ஏமாற்றம் தனக்கு **குழந்தையில்லை** எனும் உண்மையிலிருந்து வந்தது. அவர் (தனது) **வீட்டின் சுதந்திர வாளியாக தமஸ்குவை சேர்ந்த எலியேசரை** குறிப்பிட்டார்.[3]

மெசேக்கு (בֶּן-מֶשֶׁק, *ben mesheq*, பென் மெசேக்கு) "சுதந்திரவாளி" என மொழியாக்கம் செய்யப்பட்டிருப்பது கேள்விக் குரியதாக இருக்கிறது, இந்த எபிரெய உச்சரிப்பு பழைய ஏற்பாட்டில் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது; ஆகவே இதனை பலவழிகளில் பயன்படுத்தக்கூடும். எபிரெய பதமான பென் மெசேக்கு என்பதன் ஒலிபெயர்ப்பு "கையகப்படுத்தும் சுதந்திரவாளி" என வரக்கூடும், இந்த ஒழுங்கமைவிற்கு பதிலாக பெரும் பான்மையான தற்கால ஆங்கில மொழியாக்கங்கள் "சுதந்திரவாளி" என குறிப்பிடுகிறது (RSV; NRSV; NEB; NASB).[4] இந்த ஆங்கில மொழியாக்கங்கள் பயன்படுத்தும் "சுதந்திரவாளி" எனும் பதம் 15:3ல்[5] (יָרַשׁ, *yarash,* யாராஸ்) யாராஸ் என்பதற்கு எப்போதும் கூறப்படும் பொருளிற்கு இணைச்சொல்லாக இருக்கிறது எனும் யூகத்தின் அடிப்படையில் கூறப்பட்டுள்ளதாகும்.

**வசனம் 3.** ஆபிரகாம் தன் **வீட்டில்** அடிமையாக **பிறந்த** தமஸ்குவை சேர்ந்த எலியேசரை தத்தெடுத்து ஐயத்திற்கு இடமின்றி அவரை **சுதந்திரவாளியாக்கி** விட்டார். இயற்கையான சுதந்திரவாளியற்ற ஒருவர் தனது அடிமையினை சுதந்திரவாளியாக ஏற்றுக் கொள்வது பண்டைய மெசெப்பொத்தோமிய பண்பிற்கு நல்லிணக்கமாக இருந்தது. தத்தெடுக்கப்பட்ட மகன் தனது புதிய பெற்றோரை அவர்கள் வாழ்நாள் வரை பாதுகாத்து, அவர்களது மரணத்தின் போது ஒரு சரியான நல்லடக்கத்தை கொடுப்பது அவர்களின் கடமையாக இருந்தது. அதன் பின்னர் அவர் அவர்களது சொத்துக்களை சுதந்தரித்துக் கொள்ளலாம். எப்படியாயினும் தத்தெடுப்பிற்கு பிற்பாடு அவர்களுக்கு இயற்கையான மகன் பிறப்பானெனில் அவர் அவர்களின் முதன்மை சுதந்திரவாளியாக மாறி தத்தெடுக்கப்பட்ட மகனின் நிலை தரம் தாழ்த்தப்படும்.

குழந்தையற்ற இணையர்கள் ஒரு அடிமையை தத்தெடுப்பது நுஃஜி வரைப்பட்டியலின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. கி.மு பதினைந்தாம் காலத்தினை சேர்ந்த இந்த ஆயிரக்கணக்கான வரைப்பட்டியல்கள், 1925 முதல் 1931 வரை மெசபொத்தோமி யாவின் வடகிழக்கேயிருந்த நுஃஜியில் கண்டெடுக்கப்பட்டது. இந்த வரைப்பட்டியல்களின் காலம் ஆபிரகாமின் காலத்திற்கு பல நூற்றாண்டுகள் பிற்பாடாக இருப்பினும், கிழக்கத்திய பண்பாட்டின் நிலையான இயல்பால் அவைகள் தொகுக்கப்பட்ட பல ஆண்டுகளுக்கு பிற்பாடும் அவர்கள் தத்தெடுப்பதனை குறித்து பின்பற்றிவரும் நிபந்தனைகளையும் சட்டங்களையும் இது எடுத்துத்துரைக்கின்றது.[6]

**வசனம் 4.** எலியேசர் சுதந்திரவாளியாக வாகை சூட்டப்படும் வாய்ப்புகளை ஆண்டவர் புறந்தள்ளினார். மாறாக அவரது **உடல் மற்றும் இரத்தம் தொடர்பான** சொந்த **மகனொருவனை** பெறுவாரெனவும் அவரே அவரது சுதந்திரவாளியாக இருப்பாரெனவும் ஆபிரகாமிற்கு ஆண்டவர் திட்டமாக வாக்குப்பண்ணினார். அதிகாரம் 16ல் காணப்படுவதுப் போன்று, சாராள் கருத்தரிப்பதற்கு தகுதியற்றவராக இருப்பதனால் இது ஒரு பெரும் பிரச்சனையாக உருவெடுத்தது. அந்த நொடியே ஆண்டவர் தமது வாக்குத்தத்தமானது தனிமனிதனான ஆபிரகாமோடு நின்றுவிடாமல், வருங்கால சந்ததிகளில் பல குலமரபுகளை உள்ளடக்கியதாக இருக்குமென கூறி அவரது ஐயத்தை நீக்கினார்.

**வசனம் 5.** ஆண்டவர் (ஆபிரகாமை) **வெளியே அழைத்துச்** சென்று **வானத்து** விண்மீன்களை பார்த்து எண்ண கூறினார். இப்படி கூறுவதில் ஆண்டவர் தமது வலியுறுத்தலை மூதாதையின் உடலிலிருந்து எண்ணிக்கைக்கு அப்பாற்ப்பட்ட **உன்னுடைய சந்ததியினரும் அப்படியிருப்பார்களென்பதற்கு மாற்றுகிறார்** (22:17; காண்க 26:4). எப்படியாயினும் ஆபிரகாம் வானத்து விண்மீன்களையும் எண்ண கூடாமலும் போனது, மற்றும் தன் வழியாய் வரும் மகன் மூலமாக எண்ணற்ற சந்ததியினரை கற்பனை செய்து பார்க்கக் கூடாமலும் போனது. அதுமட்டுமில்லாமல் அவர் மூலமாய் வரும் எண்ணற்ற ஆவிக்குரிய வழிமரபினரின் ஆழத்தையும் அவரால் கற்பனை செய்துப் பார்க்க முடியாமல் போனது (கலா. 3:26-29).

**வசனம் 6.** விரிவாக்கப்பட்ட வாக்குத்தத்தத்திற்கு மறு மொழியாக **ஆபிரகாம் ஆண்டவரை விசுவாசித்தார்.** ஆபிரகாம் ஆண்டவரை விசுவாசிப்பது முதன் முறையானதல்ல எனினும் “விசுவாசித்தான்” (אָמַן, *’aman*, அமன்) எனும் வினைச்சொல்லும், அல்லது அதன் பெயர் சொல்லாகிய “விசுவாசம்” என்பதும் வேதத்தில் காணப்படுவது இதுவே முதன்முறையாகும். அவர் ஊர் பட்டணத்தில் இருந்த போது ஆண்டவருடைய அழைப்பினை பெற்ற போதே அவரது விசுவாச பயணம் தொடங்கியது (11:31; 15:7; அப். 7:2). மேலும் அது

ஆரானிலிருந்த போது அழைப்பினால் புதுப்பிக்கப்பட்டது (11:31-12:5) எப்படியாயினும் ஆபிரகாம் ஆண்டவரை விசுவாசித்தார் என உறுதிப்படுத்துவது அவருடைய தீர்க்கமான விசுவாசத்தை எடுத்துரைக்கிறது, இதன் பொருள் யாதெனில் அவர் யாவேயில்[7] தன்னுடைய விசுவாசத்தை வைத்தார் என்பதாகும். முன்னிடைச் சொல்லாகிய “ல்” “இன்” (בְּ, *be*, பி) (יהוה, *YHWH*, யாவே) “ஆண்டவருக்கு” முன்பாக என்பது அவர் ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தில் விசுவாசம் கொண்டார் என்பதனை மட்டும் குறிப்பிடாமல், அதனை விசுவாசித்தார், நம்பினார் அல்லது ஆண்டவர் மீதே நம்பிக்கைக் கொண்டார் எனும் எண்ணத்தைக் கொடுக்கிறது.[8]

ஆபிரகாமின் விசுவாசத்திற்கு ஆண்டவரின் மறு மொழி யாதெனில் அவர் **அதனை அவருக்கு நீதியாக எண்ணினார்** என்பதாகும். “எண்ணினார்” எனும் பதம் חָשַׁב (*chashab*) ச்சசாப் என்பதாகும், இது “கணக்கிடுதல்” அல்லது ஒருவரின் “கணக்கில் வைத்தல்” எனும் பொருளைத் தருகின்றது. இவ்வழக்கத்தின் சித்தரிப்பு எண்ணாகமம் 18:26-30 காணப்படுகிறது: இஸ்ரவேல் மக்கள் தங்கள் விளைச்சலிலிருந்து பத்தில் ஒரு பங்கை லேவியர்களுக்கு அளிக்க வேண்டும், லேவியர்கள் தாங்கள் பெற்றுக் கொண்ட பத்தில் ஒரு பங்கிலிருந்து, பத்தில் ஒரு பங்கை ஆண்டவருக்கு கொடுக்க வேண்டும். அதை அவர் லேவியர்களின் சொந்த விளைச்சலிலிருந்து வந்ததாக “எண்ணிக் கொள்வார்.” “எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான் எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபட மில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான்” (சங். 31:1, 2) என பாவத்தைக் குறித்து எதிர்மறையான பொருளில் கூறப் பட்டிருப்பினும் ச்சசாபிற்கு (எண்ணிக் கொள்ளுதலுக்கு) இதனை போன்ற கருத்தினையே தாவீதும் கூறியுள்ளார். ஆண்டவர் ஏற்கெனவே அவரது பாவத்தை “மன்னித்துவிட்டபடியால்” மற்றும் “மூடிவிட்டபடியால்” பாவம் அவரது கணக்கில் கணக்கிடப் படவில்லை (சங். 32:1, 2).

ஆபிரகாமின் விசுவாசம் “அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது” எனும் சொற்றொடரில் “ நீதி” (צְדָקָה, *tsᵉdaqah*) என்பதன் பொருள் என்ன? இப்பதம் தனி நபரின் நீதியான செயல்கள் அல்லது ஒழுக்கம் நிறைந்த செயல்களைக் குறிப்பிட பழைய ஏற்பாடெங்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (ஆதி. 30:33; உபா. 6:24, 25; ஏசாயா 33:5; எசே. 14:14, 20). இது சோதோம் கொமோரா மக்கள் செய்த தீய மற்றும் ஒழுக்கமற்ற செயல்களுக்கு முரண்பாடானதாக இருக்கிறது. 20:4ல் அபிமலேக்கும் இதனைப் போன்ற ஒரு முரண்பாட்டினையே செய்தார். இஸ்ரவேலருக்கு பிற்பாடு கொடுக்கப்பட்ட சட்டத்தில் வழக்குகளில் நீதிமான்கள் (צְדָקָה, *tsᵉdaqah*) விடுதலை செய்யப்பட வேண்டுமெனவும்,

ஆனால் பொல்லாப்பு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது (உபா. 25:1).

ஒருவன் "நீதியையும், நியாயத்தையும் கடைப்பிடிக்கும்போது" அவன் "நீதிமானாகிறான்" (எசே. 18:5) என எசேக்கியேல் கூறியிருக்கிறார். அதன் பின்னர் அவர் நீதிமான் ஒருவன் செய்யக் கூடாத பாவப்பட்டியலொன்றை இணைத்திருக்கிறார் (எசே. 18:6-8). என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாயிருப்பானாகில் அவனே நீதிமான் அவன் பிழைக்கவே பிழைப்பான் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் என தனது விளக்கத்தை சுருக்கியிருக்கிறார் (எசே. 18:9). சங்கீதம் 1ன் ஆக்கியோனும் ஆண்டவருடைய வேதத்தில் தியானமாக இருந்து அதன்படி நடக்கிற மனிதனை நீதிமானென இதனைப் போன்றே விளக்கியுள்ளார். இப்படிப்பட்ட மனிதன் "பாக்கியவான்," ஆண்டவர் அவனை "அறிந்திருக்கிறார்" (יָדַע, *yada'*, யதா, அங்கீகரிக்கிறார்[9]); அவர்கள் பதரைப் போன்று அழிந்து போகும் துன்மார்க்கருக்கு முரண்பட்டு நிற்கிறார்கள் (சங். 1:1, 2, 6).

ஆபிரகாமின் செயல்கள் நீதியானதாக இருந்து, அப்படிப்பட்ட வெகுமதிக்கு அவர் தகுதியானவர் என்பதற்காக ஆண்டவர் அவரது விசுவாசத்தை நீதியாக எண்ணவில்லை. ஆதியாகமம் 11:26-15:6ல் கூறப்பட்டுள்ள கால அட்டவணைப் பட்டியலில் "ஆண்டவருக்கு முன்பாக நீதிமான்" எனப்படுதலுக்கு அவர் மெச்சத்தக்க செயலேதும் செய்யவில்லை என்பதனை நாம் காண்கிறோம். மாறாக அவரது விசுவாசத்தின் (நம்பிக்கையின்) காரணமாக நீதியானது (ஆண்டவரோடு உள்ள சரியான உறவுமுறை) கிருபையின் கொடையாக அவருக்கு அளிக்கப்பட்டது. அவர் தனது நற்செயல்களாலோ அல்லது நீதிமானாக இருந்து தெய்வீக அங்கீகாரம் பெற்றதாலேயோ ஆண்டவரை கடனாளியாக்கி அவர் தனக்கு கொடுத்தேயாக வேண்டும் என்ற நிலைக்கு ஆண்டவரைத் தள்ளவில்லை (ரோமர் 3:21-28; 4:1-8; 5:17).

## உடன்படிக்கைக்கு தயாராகுதல் (15:7-11)

**7பின்னும் அவர் அவனை நோக்கி: இந்தத் தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும்பொருட்டு, உன்னை ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து அழைத்துவந்த கர்த்தர் நானே என்றார். 8அதற்கு அவன்: கர்த்தராகிய ஆண்டவரே, நான் அதைச் சுதந்தரித்துக்கொள்வேன் என்று எதினால் அறிவேன் என்றான். 9அதற்கு அவர்: மூன்றுவயதுக் கிடாரியையும், மூன்றுவயது வெள்ளாட்டையும், மூன்றுவயது ஆட்டுக்கிடாவையும், ஒரு காட்டுப்புறாவையும், ஒரு புறாக்குஞ்சையும், என்னிடத்தில்**

**கொண்டுவா என்றார். [10]அவன் அவைகள் எல்லாவற்றையும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவைகளை நடுவாகத் துண்டித்து, துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்தான்; பட்சிகளை அவன் துண்டிக்கவில்லை. [11]பறவைகள் அந்த உடல்களின்மேல் இறங்கின; அவைகளை ஆபிராம் துரத்தினான்.**

ஆபிரகாமிற்கு ஆண்டவர் அற்புதமான வாக்குத்தத்தங்களை செய்திருந்தார். அவைகள் அவருக்கு ஏற்றுக் கொள்வதற்கு கடினமானதாக இருக்கும் அளவிற்கு மிகவும் அற்புதமானவைகளாக இருந்தன. அவருடைய வாக்குத்தத்தத்திற்கும் அவைகளை யாருடன் செய்தாரோ அவர்களோடு அவர் கொண்டுள்ள உண்மையான உறவிற்கும் உத்திரவாதமாக, வேதத்தின் இந்த முக்கியமான நபரோடு ஒரு தனித்தன்மை வாய்ந்த நிகழ்வில் ஆண்டவர் உடன்படிக்கையை முத்திரையிட்டார்.

**வசனம் 7.** 15:7-11ல் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் முன்னுரையானது சீனாய் மலையில் ஆபிரகாமின் வழிமரபினருக்கு கொடுக்கப்பட்ட மோசேயின் உடன்படிக்கை/பத்துக் கட்டளைகளுக்கு முன் நிழலாட்டமாக இருக்கிறது (யாத். 20:1, 2). ஆண்டவர் தம்மை **கர்த்தர்** (יהוה, *YHWH*) என அடையாளப்படுத்திக் கொண்டு தமது உரையாடலை தொடங்கினார். இது ஆண்டவர் அவருக்கு என்ன செய்திருந்தார் என்பதனை பின் நோக்கியதாக இருந்தது. இந்த நாட்டை கொடுத்து அதனை சுதந்தரித்துக் கொள்ளும்படியாக (அவரை) **கல்தேயரின் ஊர் பட்டணத்தை விட்டு கொண்டு வந்ததாக ஆண்டவர் கூறினார்** (11:31; அப். 7:2-4 ஆகிய வசனங்களை காண்க).

**வசனம் 8.** இந்த நிகழ்வில் ஆண்டவருக்கு ஆபிரகாமின் மறுமொழியானது ஒரு வேண்டுகோளாக அமைந்தது. **கர்த்தராகிய ஆண்டவரே, நான் அதைச் சுதந்தரித்துக் கொள்வேன் என்று எதினால் அறிவேன்** என்றான். அவர் ஒரு நாளில் இந்த நாட்டின் உரிமையாளனாக இருப்பேன் என தன்னை திருப்திப்படுத்தும் ஒரு திடமான சான்றை வேண்டினார் (15:12-16 ஐக் காண்க).

**வசனம் 9.** ஆண்டவர் இந்த மூதாதையோடு சில பறவைகளையும் விலங்குகளையும் ஆயத்தம் செய்யும்படி கூறினார். இவைகள் பிற்காலத்தில் இஸ்ரவேல் மக்கள் மோசேயின் சட்டத்தின் கீழ் பலியிடப்போகும் படைப்புகளுக்கு ஒப்பாக இருந்தது. ஆண்டவர் ஆபிரகாமிற்கு மூன்று வயதுக்**கிடாரியையும், மூன்றுவயது வெள்ளாட்டையும், மூன்றுவயது ஆட்டுக்கிடாவையும், ஒரு காட்டுப்புறாவையும், ஒரு புறாக்குஞ்சையும், என்னிடத்தில் கொண்டுவா** என கட்டளையிட்டார். மிருகங்களைப் பொறுத்த மட்டில் அவை ஒவ்வொன்றும் மூன்று வயதுள்ளதாய் இருக்க வேண்டும், இது ஒருவேளை "காலத்திற்கு உகந்த மதிப்பாக"[10] இருக்கக்கூடும். செல்வ

வளம் மிகுந்தவரான ஆபிரகாமிற்கு இப்பலிகளை அளிப்பது மிகவும் எளிதான ஒன்றாக இருந்தது.

**வசனம் 10.** ஆபிரகாம் விலங்கினங்களை இரண்டாக துண்டித்து ஆண்டவருக்கு முன்பாக வைத்தார். ஆனால், பறவைகளையோ அவர் துண்டிக்கவில்லை. "உடன்படிக்கை செய்தல்" என்பது எபிரெய உச்சரிப்பில் இலக்கிய ரீதியாக "ஒரு உடன்டிக்கையை துண்டித்தல் [כָּרַת, *karath*] என பொருள் தருகிறது (15:18). இதன் காரணம் என்னவெனில் ஒருவேளை உடன்படிக்கை நிகழ்வின் போது பலியிடப்படுகின்ற அனைத்து விலங்கினங்களும் தொண்டைகள் அறுக்கப்பட்டும் சில விலங்கினங்கள் இரண்டாக துண்டிக்கப்பட்டும் இருக்கின்றபடியினால் இப்படிப்பட்ட ஒரு விளக்கம் கூறப்பட்டிருக்கலாம்.

ஒரு உடன்படிக்கையை துண்டித்தலுக்கு வேதத்தில் மற்றுமொரு இடத்தில் கூறப்பட்டுள்ள ஒரே எடுத்துக்காட்டு எரேமியா 34:18, 19ல் உள்ளது. கி.மு. 588-586ல் பாபிலோனிய படைகளால் எருசலேம் பட்டணம் முற்றுகையிடப்படுகையில் நடந்த ஒரு நிகழ்வினை இது விளக்குகிறது. பட்டணம் நம்பிக்கையற்ற சூழ்நிலையில் இருந்தது, மேலும் பட்டணத்தை பாதுகாக்க அடிமைகளின் உதவி அந்த அடிமைகளின் உரிமையாளர்களுக்கு அவசியப்பட்டது. எனவே அவர்கள் எபிரெய அடிமைகளில் ஆண் பெண் இருவரையும் விடுவிக்க ஒப்புக் கொண்டனர். அவர்கள் தூய்மையான ஒரு உடன்படிக்கையினை ஏற்படுத்தி, ஓரு கன்றுக்குட்டியினை இரண்டாக துண்டித்து அந்த இரண்டு துண்டங்களின் நடுவே கடந்துச் செல்லும் சடங்குகளால் முத்திரையிட்டனர். யூதா மற்றும் எருசலேமின் அதிகாரிகள், நீதிமன்ற அதிகாரிகள், ஆசாரியர்கள், மற்றும் மக்கள் ஆகியோர் உள்ளடங்கிய பட்டணத்தின் அனைத்து தலைவர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். இந்த துண்டிக்கப்பட்டு உயிரற்ற விலங்குகளுடைய இரண்டு பாகங்களுக்கு நடுவிலே அவர்கள் கடக்கையில், அடிமைகளை விடுவிக்க வேண்டுமென அவர்கள் செய்து கொண்ட வாக்குறுதிகளை காத்துக்கொள்ள தவறிடும் பட்சத்தில் தங்கள் மேல் தாங்களே சாபங்களை வரவழைத்துக் கொள்கின்றனர். ஒருவேளை அவர்கள் இந்த உடன்படிக்கையினை மீறும் பட்சத்தில் இந்த காட்சியில் வருகிறபடி இந்த விலங்கினம் கொடூரமாக அடித்துக் கொல்லப்பட்டது போன்று இவர்களுக்கும் மரணம் காத்திருக்கிறது என்பதனை இப்படி கடந்து செல்வது சித்தரிக்கிறது. இதன் சுருக்கம் யாதெனில் "நாங்கள் செய்துக்கொண்ட இந்த அர்ப்பணிப்பை நாங்கள் மீறினால் இந்த விலங்கிற்கு நடந்ததனைப் போன்று எங்களுக்கும் நடக்கட்டும்" என அவர்கள் கூறுகின்றனர்.

பார்வோனாகிய ஹோப்பரா தனது படைகளை திரட்டி அழுத்தத்தின் பிடியிலிருந்த எருசலேமை மீட்க வீணான முயற்சியில் ஈடுபடுகையில், பாபிலோனியர்கள் தற்காலிகமாக தங்கள்

முற்றுகையினை விலக்கி எகிப்தியரோடு போரிட சென்றனர். இப்படி நடக்கையில் ஒவ்வொரு யூத அடிமைகளின் உரிமையாளர்களும் தங்கள் அடிமைகளை ஆண்டவரின் பெயரால் உடன்படிக்கை செய்து கொண்டு திரும்ப பெற்றுக் கொண்டனர். எனவே ஆண்டவர் அவர்களுக்கு "பட்டயத்திலிருந்தும், பேரழி விலிருந்தும், மற்றும் பஞ்சத்திலிருந்தும்" விடுதலையினை கட்டளையிட்டார் (எரே. 34:15-17). அவர் "அவர்களது பகைவர் மற்றும் அவர்கள் உயிரை வாங்க தேடுவோரையும் அவர்கள் கையில் ஒப்புக் கொடுப்பதாகவும்," அவர்களுக்கு வாக்குப் பண்ணினார் (எரே. 34:20). யாவேயின் பெயரால் உடன் படிக்கை செய்த பின்னரும் யூத தலைவர்கள் தங்கள் ஆண் பெண் அடிமைகளை கடின இருதயத்தோடு நடத்தினால், அவர்கள் தங்கள் பாவத்திலிருந்து மீட்படைவார்கள் எனும் நம்பிக்கை இனி ஒருகாலத்திலும் வரப்போவது இல்லை. இந்த காரணத்தினால் தான் ஆண்டவர் நாட்டை பட்டயத்தினாலும், பேரழிவினாலும், மற்றும் பஞ்சத்தாலும் அடிக்கடி அழித்துப் போட்டார். சிறைபிடிக்கப் பட்டிருக்கும் உயிரோடு மீந்திருக்கிறவர்கள் இதன் அழிவின் வழியாய் சிலை வழிபாட்டையும் பொல்லாத வழிகளையும் விட்டு விட வேண்டுமெனும் பாடத்தை தண்டனையோடு கற்றுக் கொள்ள வேண்டியதாக இருந்தது.

வேதாகமத்திற்கு வெளியே "உடன்படிக்கையைத் துண்டித்தல்" என்பது பண்டைய கிழக்கத்திய உடன்பாடுகளிலும் காணப் படுகின்றது. ஒரு எடுத்துக்காட்டில் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் நடந்த ஓர் உடன்படிக்கையினை அங்கீகரிக்க ஒரு ஆட்டுக் குட்டி கொண்டுவரப்பட்டு அதன் தலை துண்டிக்கப்பட்டது. "துண்டிக்கப் பட்டது ஆட்டுக்குட்டியின் தலையல்ல. அது மடிலுவின் தலை, அவரது மகன்களின் தலை, அவரது அதிகாரிகளின் தலை மற்றும் நாட்டிலுள்ள அவருடைய மக்களின் தலையென" அந்த உடன் பாட்டின் வாசகங்கள் கூறுகின்றது. ஒருவேளை மடிலு இந்த உடன்பாட்டை மீறி பாவம் செய்தால் மடிலுவின் தலையும் அவருடைய மகன்களின் தலையிலும் இதனைப் போன்றே கொய்யப்படும்.[11] இதே காலத்தை சேர்ந்த மற்றொரு வாசகம் உடன்பாட்டை மீறினால் நடப்பதென்ன என்பதனை இவ்வாறு கூறுகிறது, "இந்த கன்றுக் குட்டி துண்டிக்கப்பட்டிருப்பது போன்றே மட்டியேலின் தலையும், அவருடைய அதிகாரிகளின் தலையும் துண்டிக்கப்படும்".[12]

**வசனம் 11.** ஆபிரகாம் விலங்குகளையும் பறவைகளையும் கொன்ற சடங்கின் நிகழ்வு, பறவைகள் அந்த உடல்களின்மேல் இறங்கின; எனும் சொற்றொடருடன் நிறைவு பெறுகிறது. இந்த **பறவைகள் பிணத்தை தின்பதற்காக இறங்கின** என்பது திண்ணம், ஆனால் **ஆபிரகாம் அவற்றை துரத்தினார்**. பிணங்களை உண்ணும் பறவைகள் பழைய ஏற்பாட்டில் புற இன மக்களை குறிப்பிடுகிறது (எசே. 17:3, 7; 5:9; லேவி. 11:13-19; உபா. 14:12-19 ஆகிய வசனங்களை காண்க). எனவே சிலர்

இதனை பலி செலுத்தப்பட்ட விலங்குகள் இங்கே இஸ்ரவேல் நாட்டையும், ஆபிரகாமையும் குறிக்கிறதென்றும், ஒரு வழியில் தனது எதிர்கால வழிமரபினரை புற இனத்தவரின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கிறார் எனவும் கூறுகின்றனர். எப்படியாயினும் இந்த விளக்கம் ஆபிரகாமின் நோக்கத்தையும் செயலையும் விட மிகவும் அதிகமானதாக இருக்கிறது. ஒரு உயிரற்ற உடல் பூமியின் மேல் கிடக்கையில் இயற்கையாக என்ன நடக்குமோ அதுதான் இங்கு நடைபெற்றதென்பதே இங்கு கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. பிணந்தின்னி பறவைகள் இயற்கையாகவே ஈர்ப்பு கொள்ள கூடும் அதே போல வழிபாடு செய்கிற ஒருவர் யாவேயின் கட்டளைப்படி தூய்மையான டங்கின் மூலம் பலியிடப் பட்டவைகளை விட்டு பிணந்தின்னிகளை கண்டிப்பாக விரட்டியடிப்பார்.

## உடன்படிக்கைக்கான தீர்க்கதரிசனம் (15:12-16)

**12சூரியன் அஸ்தமிக்கும்போது, ஆபிராமுக்கு அயர்ந்த நித்திரை**
**வந்தது; திகிலும் காரிருளும் அவனை மூடிக்கொண்டது. 13அப்பொழுது**
**அவர் ஆபிராமை நோக்கி: உன் சந்ததியார் தங்களுடையதல்லாத**
**அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச்**
**சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம்**
**உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய்.**
**14இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன்;**
**பின்பு மிகுந்த பொருள்களுடனே புறப்பட்டு வருவார்கள். 15நீ**
**சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய்; நல்ல**
**முதிர்வயதிலே அடக்கம்பண்ணப்படுவாய். 16நாலாம் தலைமுறையிலே**
**அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்ப வருவார்கள்; ஏனென்றால்**
**எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை என்றார்.**

**வசனம் 12.** சூரியன் மறைகையில் ஒரு **ஆழ்ந்த தூக்கம்** “தார்-டெமா” [תַּרְדֵּמָה, *thardemah*] **ஆபிரகாமின் மேல் வந்தது.** ஆதியாகமம் 2:21ல் ஆதாம் அனுபவித்தது போன்ற தூக்கமே இங்கும் நிகழ்ந்தது, மேலும் இது மற்ற இடங்களில் கனவு, தரிசனம், மற்றும் வெளிப்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட அதே பதமாக இருக்கிறது (யோபு 4:13; 33:15). இந்த குறிப்பிட்ட நிகழ்வில் மூதாதையின் ஆழ்ந்த உறக்கம் **திகிலையும் காரிருளையும்** கொண்டு வந்தது. வேதத்தில் காணப்படும் மனிதர்கள் ஆண்டவருடைய சமூகத்திற்கு வரும்போது துணிவற்ற உணர்வினை அனுபவித்தனர். ஒரு துயரமான தீர்க்கதரிசனத்தின் சமயத்திலும், தனிநபருக்கோ அல்லது அவர்களின் வழிமரபினருக்கோ கடினமான சூழல்கள் வரப்போவதாக தீர்க்கதரிசனம் உரைக்கையில் இந்த அனுபவம் உண்மையானதாக இருக்கிறது.

**வசனங்கள் 13, 14. ஆண்டவர்** ஆபிரகாமிற்கு அவருடைய வழிமரபினர் கானான் நாட்டை சுதந்தரிப்பார்கள் எனும் வாக்குத்தத்தத்தை தெளிவுப்படுத்தி மறுபடியும் உறுதிப்படுத்தினார். எனினும் அவர்கள் முதலாவது தங்கள் நாடல்லாத வேறொரு நாட்டில் **அந்நியர்களாக** (גֵּר, *ger*, அந்நிய குடிகள்) இருக்க வேண்டும் என கூறினார். ஆபிரகாம் எபிரோனிய மனிதர்களிடம் சாராளின் கல்லறை நிலத்தைக் குறித்து பேசுகையில் இதே பதத்தினை (ஜெர், *ger*) பயன்படுத்துகிறார் (23:4). வாக்குப்பண்ணப்பட்ட நாட்டினை கைப்பற்றின பிறகு அதில் குடியிருந்த அந்நிய குடிகளை (புற இனத்தவர்களை) குறிப்பிட இந்த பதமே வழக்கமாக பயன்படுத்தப்படுகிறது (லேவி. 16:29; 17:8, 12, 15; 18:26; 19:10, 33, 34). மேலும் இந்நாள் வரைக்கும் கானான் நாட்டில் குடியிருக்கும் இஸ்ரவேலர்களையும் குறிப்பிட (ஜெர், *ger*) எனும் பதம் அதே பயன்படுத்தப்படுகிறது, இது ஒரு சிலருக்கு குழப்பத்தை ஏற்படுத்தக் கூடும். (லேவி. 25:23; 1 நாளா. 29:15).

ஆபிரகாமிற்கு அவரது வழிமரபினர் **நானூறு ஆண்டுகள் அடிமைகள் ஆக்கப்படுவதற்கும் உபத்திரவத்திற்குள்ளாக்கப் படுவதற்கும்** முன்னர் எந்த நாட்டில் அந்நியர்களாக வாழ்வார்கள் என்பதனை ஆண்டவர் தெரிவிக்கவில்லை (15:16ன் விமர்சனத்தை காண்க). **உபத்திரவப்படுத்தும்** நாட்டை எவ்வழியில் **நியாயந் தீர்ப்பார்** என்பதனையோ (காண்க யாத். 7-11; 14) அல்லது **சொத்துக்கள் பலவற்றோடு** நிகழும் அவர்களின் புறப்படும் சூழலையோ அவர் வெளியிடவில்லை (காண்க யாத். 12:35, 36). ஏனெனில் ஒருவேளை தனது சமீபத்திய அனுபவத்தின் மூலம் எகிப்து தான் அந்த உபத்திரவப்படுத்தும் நாடாக அதிலிருந்து தனது வழிமரபினர் பெரும் பொருளோடு வருவார்கள் என யூகித்திருக்கக் கூடும் ஆனால் இதனைக் குறித்து எந்த குறிப்பும் வசனத்தில் கூறப்படவில்லை.

**வசனம் 15.** அவரது வழிமரபினரை போன்று இல்லாமல் ஆண்டவர் அவரை சந்தடிமிக்க எதிர்காலத்திலிருந்து பாதுகாத்து, அவர் அவருடைய **முதிர் வயதில் அவருடைய பிதாக்களோடு சமாதானமாக சேர்ந்து அடக்கம் பண்ணப்படுவாரென்பதனை** வெளிப்படுத்தினார். அவர் எகிப்தில் பார்வோனோடு சந்தித்த இடைஞ்சல் மிகுந்த அனுபவத்திற்கும், கிழக்கத்து அரசர்கள் நான்கு பேரோடு போர் புரிந்ததற்கும் மாறாக இந்த ஜாதிகளின் தகப்பன் முதிர் வயது வரை வாழ்ந்து சமாதானமாக மரிப்பார் என்பதனை ஆண்டவர் வெளிப்படுத்தினார். இப்படி கூறுவது இனி அவருக்கு எந்த கடின சூழலும் வராது என்று பொருள்படுத்தாது, ஆனால் கடின சூழல்களை அவரது வாழ்வில் இருக்கும் ஆசீர்வாதங்கள் களைந்துப் போட்டுவிடும். உண்மையில் ஆபிரகாமின் உலக வாழ்க்கை பயணத்தின் முடிவு “முதிர்

வயதில்" (175 வயதில்) "வாழ்வில் திருப்தியடைந்த போது" நிகழ்ந்தது (25:7, 8).

**வசனம் 16.** ஆண்டவர் ஆபிரகாமின் எதிர்காலத்தை குறித்த அக்கறைக்கு முடிவு கட்டின பின்னர் அவர்கள் **நான்காவது தலைமுறையில்** கானானிற்கு **திரும்புவார்களென** அவருடைய வழிமரபினரின் எதிர்காலத்திற்கு திரும்பினார். சிலர் இஸ்ரவேலர்கள் எகிப்தில் "நானூறு ஆண்டுகள்" தங்குவார்கள் என கூறும் 15:13 ஆம் வசனத்தோடு இந்த சொற்றொடர் முரண்பட்டு நிற்பதாக கூறுகின்றனர். எப்படியாயினும் "தலைமுறை" דּוֹר, (*dor*, டோர்) எனும் எபிரெய பதம் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான காலத்தினை குறிப்பிடாமல், ஒரு குறிப்பிட்ட காலத்தின் தொகுப்பை குறிக்கிறது. எடுத்துக்காட்டாக மோசே எகிப்தை விட்டோடி சிப்போராளை சந்தித்து அவரை மணம் செய்து கொண்ட போது சுமார் 40 வயதாக இருந்தார் (அப். 7:23-29); மேலும் இஸ்ரவேலர்கள் அவர்களுடைய முரட்டாட்டமான அவிசுவாசத்தாலும் மற்றும் கீழ்ப்படியாமையாலும் பாலை நிலத்தில் அலைந்து திரிய தண்டிக்கப்பட்டது நாற்பது ஆண்டுகள் - ஒரு "தலைமுறை" (*dor*; எண். 32:13). மோசேயின் காலத்தில் ஒரு தலைமுறை என்பது நாற்பது ஆண்டுகள் என ஐயத்திற்கிடமின்றி இருக்குமெனில் ஆபிரகாமின் காலத்தில் அது தோராயமாக நூறாண்டுகள் இருக்கக்கூடும், ஏனெனில் ஈசாக்கு பிறக்கையில் அவர் அந்த வயதுடையவராக இருந்தார் (17:17; 21:5) மேலும் முற்பிதா 175 ஆண்டுகள் வாழ்ந்தார் (25:7).

15:13ல் உள்ள "நானூறு ஆண்டுகள்" என்பது ஒரு குறிப்பிட்ட இலக்கத்தை குறிக்காமல் (காண்க அப். 7:6) முழுமையான எண்ணை குறிப்பிடுகிறது. இது யாத்திராகமம் 12:40, 41ல் கூறப் பட்டுள்ள காலக்கணக்கில் வெளிப்படையாக இருக்கிறது: "இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த காலம் நானூற்று முப்பது வருஷம். நானூற்றுமுப்பது வருஷம் முடிந்த அன்றைத்தினமே கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டது."

ஆண்டவர் கானான் நாட்டை ஆபிரகாமின் சந்ததியினருக்குக் கொடுப்பதற்கு ஏன் தாமதப்படுத்தினார் என்பதற்கான காரணம் 15:16ன் கடைசி சொற்றொடரில், **ஏனென்றால் எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை** என கூறப்பட்டுள்ளது. எமோரியர்கள் எனும் பதம் பழைய ஏற்பாட்டில் ஏற்ற இறக்கம் நிறைந்ததாக இருக்கிறது; சில சமயங்களில் அது நாட்டில் வாழ்ந்த பல்வேறு குழுக்களில் ஒரு குழுவினரை குறிக்கிறது (15:21; யாத். 3:8), மேலும் சில சமயங்களில் கானான் நாட்டில் வாழ்ந்த அனைத்து மக்களை குறிப்பிடவும் இப்பதம் பயன் படுத்தப்பட்டிருக்கிறது (15:16; ஆமோஸ் 2:10).[13] இங்கு காணப்படும் எமோரியர் என்னும் பதம் கானான் நாட்டில் வாழ்ந்த அனைத்து மக்களையும் பொருள் கொள்கிறது, ஏனெனில்

எமோரியரின் அக்கிரமம் “நிறைவாகும்” சாலேம் (שָׁלֵם, *shalem*), வரை அல்லது அதன் “முழு அளவு” (NIV) வரும் வரை கானான் நாட்டினை கைப்பற்றுதல் தொடங்கவில்லை. இது ஆண்டவர் எமோரியர்களின் (கானானியர்கள்) மீது அவர்களின் அறநெறி முற்றிலும் சீர்கெட்டு, அவர்களுடைய ஒழுக்கக்கேட்டை இனியும் தாங்கிக் கொள்ள இயலாதென்னும் நிலை வரை அவர் நீடிய பொறுமையை கொண்டிருந்தார் என்பதனை வெளிப்படுத்துகிறது.[14] கானான் நாட்டினை கைப்பற்றுதலும் அதில் குடியமைதலும் சில சமயங்களில் எண்ணுவது போன்று இஸ்ரவேலரின் ஆக்கிரமிப்பால் நிகழாமல், ஆண்டவருடைய இறையாண்மை மிக்க நியாயத்தீர்ப்பின் அடிப் படையில் அமைந்திருந்தது (லேவி. 18:24, 25; உபா. 9:5).

எண்ணற்ற தொல்லியல் தொல்பொருள்களும், எமோரியரின் (மேற்கத்தியவர்கள்) சீரிய கடற்கரையோரம் மேற்கு லீபனோனில் உள்ள ராஸ் சாம்ராவில் இருக்கும் பண்டைய செமிடிக் மொழி இலக்கியங்களும் கானானியரின் சீர்கேடை வெளிப்படுத்துகிறது. அவர்கள் வழிபாடு சிறார்களை பலியிடும் நரபலிகளை உள்ளடக்கி, பல கடவுளர்களைக் கொண்ட வழிபாடாக அமைந்திருந்தது. ஆண் பெண் துர் உபதேச விபச்சாரக்காரர்கள் அவர்களுடைய ஆலயத்தில் சேவை செய்தனர். பல வகையான குறிச் சொல்லுதலும், பில்லி சூனியமும் அங்கே நடைப்பெற்றது. இச்செயல்கள் மோசேயின் சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளது (லேவி. 18:21-25; உபா. 18:9-12).

இருந்தாலும் வட பேராட்சிப் பகுதியான இஸ்ரவேலின் அரசர்களும், தென் பேராட்சிப் பகுதியான யூதாவின் அரசர்களும் புற இன துர் உபதேசங்களையும் அவர்களின் இழிவான செயல்களையும் ஊக்குவித்தனர் (1 இராஜா. 14:21-24; 21:24-26). இச்செயலே ஆண்டவருடைய மக்கள் தங்கள் நாட்டை இழந்து, சிறைப்பட்டுப் போவதற்கு அடிப்படை காரணமாக அமைந்தது. சிலை வழிபாட்டிலிருந்தும், சடங்குகளை கைக்கொள்ளாமல் இருப்பதிலிருந்தும், தங்களுடைய எல்லா பொல்லாப்புகளிலிருந்தும் அவர்கள் மனந்திரும்ப ஆண்டவர் எமோரியர்களுக்கு அளித்தது போன்றே இவர்களுக்கும் பல நூறாண்டுகள் வாய்ப்பு அளித்திருந்தார்; ஆனால் இவர்கள் அப்படி செய்ய மறுக்கையில், முன்னர் இருந்த கானானின் குடிகளைப் போன்றே இவர்களும் கானான் நாட்டை விட்டு துரத்தப்பட்டனர் (உபா. 29:22-28; 2 இராஜா. 21:1-11; எசே. 16:35-52; தானி. 9:1-14).

## உடன்படிக்கை நிறைவேறுதல் (15:17-21)

**17சூரியன் அஸ்தமித்து காரிருள் உண்டான பின்பு, இதோ, புகைகிற சூளையும், அந்தத் துண்டங்களின் நடுவே கடந்துபோகிற அக்கினி**

**ஜூவாலையும் தோன்றின. [18]அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே**
**உடன்படிக்கை பண்ணி, எகிப்தின் நதி துவக்கி ஐபிராத்து நதி**
**என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும், [19]கேனியரும், கெனிசியரும்,**
**கத்மோனியரும், [20]ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும்,**
**[21]எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள்**
**இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன்**
**என்றார்.**

**வசனம் 17. சூரியன்** மறைந்த பின்னர் ஆண்டவர் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்யும் ஈர்ப்பு நிறைந்த காட்சியொன்றிற்கு இருளானது மேடையமைத்துக் கொடுத்தது: ஆபிரகாம் பூமியின் மீதிருந்த அந்த விலங்கினுடைய **துண்டங்களின் நடுவே புகைகிற சூளையும் கடந்துப் போகிற அக்கினி ஜுவாலையையும்** கண்டார். "சூளை" என்பதற்கு எபிரெய பதம் (תַּנּוּר, *thannur*, தன்னுர்) தன்னுர் எனும் பதம், அநேகமாக சுமார் இரண்டு அல்லது மூன்று விட்டளவு கொண்ட களிமண்ணினாலான உருளையினை குறிப்பிடுகின்றது. புகை என்பது ஆண்டவருடைய சமூகத்திற்கு அடையாளமாக இருக்கிறப்படியினால் (யாத். 3:2; 14:24; 19:18; 20:18; 24:17; சங். 18:8). சடங்கின்படி விலங்கின் துண்டங்களுக்கிடையே ஆண்டவர் நடந்து, உருவகமாக பேசினார்.

**வசனம் 18.** இப்படி செய்கையில், ஆண்டவர் **ஆபிராமோடு தன்னிச்சையாக உடன்படிக்கை செய்தார்** (அல்லது "துண்டித்தார்," *karath*) இருதரப்பு உடன்படிக்கை செய்து கொள்ள ஆபிரகாமோ, அல்லது வேறெந்த பொருளோ உடன்படிக்கையினை முறைப்படுத்த வெட்டப்பட்ட விலங்கின் துண்டங்களுக்கு நடுவே கடந்து செல்ல வேண்டியிருந்தது. மாறாக ஆண்டவரே இதனை அங்கீகரித்து மிகவும் தூய்மையான வழியில் இந்த உடன்படிக்கையை நிறைவேற்றினார்.

ஒருவேளை 15:9, 10 மற்றும் எரேமியா 34:18, 19ல் கூறப் பட்டுள்ள ஒரு விதமான சாபத்தை தன் மீதே ஆண்டவர் சுமத்திக் கொண்டாரா? ஒருவேளை அவர் "ஒருவேளை நான் இந்த உடன்படிக்கையினை காத்துக் கொள்ள தவறும் பட்சத்தில் இந்த விலங்கிற்கு நிகழ்ந்தது போன்றே எனக்கும் நிகழட்டும்" என்பதனை உறுதிப்படுத்துகிறார் எனும் பட்சத்தில் அவர் உண்மையில் மரிக்க முடியாது என்கிறபடியால் தம் மீது வெறும் ஒரு உருவகமாக மரண தண்டனையை வரவழைத்துக் கொண்டார். எது எப்படியாயினும், ஆண்டவர் எவ்விதமான சொற்களை கூறியிருப்பினும், இந்த தரிசனத்தில் ஆபிரகாம் ஒரு பெரும் ஈடுபாடு கொண்ட சாட்சியாக இருந்தார்.

ஆபிரகாமின் **வழிமரபினர்** நானூறு ஆண்டுகளுக்கு பிறகு பெற்றுக் கொள்வதாக இருப்பினும் ஆண்டவர் **அந்த நாட்டை** (அவர்களுக்கு) இப்போதே **அளித்து விட்டதாக கூறினார்**. பல தற்கால ஆங்கில மொழிபெயர்ப்புகள் "கொடுப்பது" (נָתַן, *nathan*, நாதன்) எனும் வினைச்சொல் கடந்த காலத்தில் நடந்துவிட்ட செயலாக குறிப்பிடுவது

முழு வடிவத்தில் காணப்படுகிற தென்பதனை புறந்தள்ளுகின்றன. அவைகள் மங்கலான ஒலியோடு “நான் இந்த நாட்டை கொடுக்கிறேன் என தவறாக மொழியாக்கம் செய்திருக்கின்றன” (RSV; NRSV; NIV; NEB). “நான் உங்களுக்குக் கொடுத்திருக்கிறேன்” என மிகச் சரியான மொழியாக்கத்தை NASB ஆங்கில மொழிபெயர்ப்பு கூறுகிறது. “வெகு தொலைவு எதிர்காலத்தில் உள்ள நிகழ்வு தற்போதே நடந்து விட்டதனைப் போன்று” குறிப்பிடும் “தீர்க்கதரிசன நிறைவு” வினைச்சொல் இங்கு காணப்படுகிறது.[15] இந்த நிகழ்வு இச்சூழலில் ஆண்டவர் ஏற்கனவே கொடுத்து விட்டதாக வாக்குப்பண்ணினபடி, கண்டிப்பாக நிறைவேறும்.

ஆண்டவருடைய உரையின் இறுதி பாகம் அளிக்கப்பட்ட நாட்டின் நோக்கத்தின் மீது கவனம் செலுத்தி, அதன் தென்மேற்கு எல்லையை எகிப்தின் நதி வரையென விளக்குகிறது. **எகிப்தின் நதி** (נָהָר, *nahar*, நஹார்) என்பது பழைய ஏற்பாட்டில் ஒரு முறை மட்டும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது, எனினும் இந்த பதம் நைல் நதியினை (יְאֹר, *y$^{e}$’or*, ஓர்) குறிக்க பயன்படுத்தப்படுகிற பதமல்ல. ஒருவேளை இது தென் இஸ்ரவேலின் காசா பகுதிக்கு ஐம்பது மைல் தென்மேற்கே வடகிழக்கு சீனாயிலுள்ள வாடி ஏல் - அரீஸ் என்பதனை குறிப்பிடக்கூடும். ஆர். கே ஹாரிசன் அவர்களுடைய கூற்றின்படி இதனை “எகிப்தின் வாடி நீரோட்டம்”[16] என மிக சரியாக அடையாளப்படுத்தக்கூடும். இந்த ஆறு பல சமயங்களில் உலர்ந்த தரையாகவே இருக்கும்.[17] ஆனால் வட மத்திய சீனாய் மலைகளில் மழை பெய்து, மத்திய தரைக்கடலிற்கு கீழ் நோக்கி பாய்கையில் பொங்கியெழும் நீரோட்டமாக மாறி விடும்.

முதல் முறையாக ஆபிரகாமின் வழிமரபினர் “எகிப்தின் ஆறு” தொடங்கி வடகிழக்கே **பெரும் ஆறாகிய ஐப்பிராத்து ஆறு** வரை நாட்டை சுதந்தரித்துக் கொள்வார்களென ஆண்டவர் வாக்குத்தத்தம் செய்கிறார் (உபா. 1:7; யோசுவா 1:4). எப்படியாயினும் பல நூறாண்டுகளுக்கு பின்னர் தாவீது மற்றும் சாலொமோன் காலத்தில் தான் இந்த பகுதிகளின் மேல் இஸ்ரவேலருக்கு அரசியல் பொருளாதார உரிமை வந்தது (2 சாமு. 8:3-15; 1 இராஜா. 4:21, 24). அப்படியிருந்தும் அதின் மேல் அவர்களின் பிடி ஒரு சில பத்தாண்டுகள் மட்டுமே நீடித்தது, ஏனெனில் அதின் குடிகள் அவர்களுக்கு எதிராக புரட்சி செய்து இஸ்ரவேலர்கள் தங்கள் மேல் வைத்த நுகத்தைத் தள்ளிவிட்டனர். சாலொமோனின் மரணத்திற்கு பிறகு இராஜ்ஜியம் அதிகார பூர்வமாக இரண்டாக பிளவுண்டது; அதன் பின்னர் நடந்த உள்நாட்டுப் போர்களால் அது மேலும் வலுவிழந்தது. எனவே ஆண்டவர் ஆபிரகாமிற்கு வாக்குப்பண்ணின அந்த நாட்டில் முறியடிக்கக்கூடிய எண்ணிக்கையில் குடியிருந்தவர்களின் மீது நிரந்தரமாக அதிகாரம் செலுத்த இஸ்ரவேலர்களால் கூடாமல் போனது.

**வசனம் 19.** உடன்படிக்கையின் தரிசனத்தோடு சேர்த்து, தற்சமயம் வாக்குப்பண்ணப்பட்ட நாட்டில் குடியிருக்கும் பத்து இனக்குழுக்களின் பெயர் பட்டியலை ஆண்டவர் ஆபிரகாமிற்கு கொடுத்தார், எனினும் அவர்கள் அவருடைய வழிமரபினரின் காலத்தில் நாட்டிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். 19 ஆம் வசனத்தில் தொடங்கும் இப்பட்டியல் ஒருவேளை முழுமையை உருவகப்படுத்துவதாக இருக்கக்கூடும். மேலும் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் இப்பெயர்கள் கானான் குடிகள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இதன் பிறகு பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்ற இதற்கொத்தாற் போன்றுள்ள இருபத்தேழு பட்டியல்களில், குழுக்களின் எண்ணிக்கை அதன் சிறப்பினை அடிப்படையாக கொண்டு இரண்டிலிருந்து பன்னிரெண்டு வரை மாறுபட்டிருக்கிறது[18] அதில் ஆறு (யாத். 3:8, 17; 23:23; 33:2; 34:11; உபா. 20:17; யோசுவா 9:1) அல்லது ஏழு (உபா. 7:1; யோசுவா 3:10; 24:11; அப். 13:19 பார்க்க) இன குழுக்களின் பெயர்கள் பொதுவாக அனைத்துப் பட்டியல்களிலும் இடம் பெற்றிருக்கின்றது. ஆண்டவர் இவர்களையெல்லாம் கானான் நாட்டை விட்டு வெளியேற்றப் போவதாக கூறினார். ஆதியாகமம் 15 அதிகாரம் மட்டுமே பத்து பெயர் கொண்டப் பட்டியலைக் கொண்டுள்ளது, மேலும் இதில் மட்டுமே **கேனியர், கெனிசியர்,** மற்றும் **கத்மோனியர்** ஆகியோரைப் பற்றிய அம்சங்கள் கூறப்பட்டுள்ளது, இந்த மக்கள் குழவினர் ஆபிரகாம் காலத்தில் கானானின் தென் பகுதியில் வாழ்ந்திருக்க வேண்டும்.

இந்த மூன்று குழுவினரும் ஒருவேளை யூதா குலமரபில் ஒன்றிணைந்திருக்க வேண்டும் எனினும் கத்மோனியரைக் குறித்து இந்த வசனப்பகுதியில் மட்டுமே கூறப்பட்டுள்ளது, இவர்களைப் பற்றி வேறெந்த தகவலும் அறியப்படவில்லை. கேனியரைக் குறித்து மூன்று சுருக்கமான குறிப்புகளோடு குறைவான தகவல் மட்டுமே நமக்கு கிடைக்கப் பெற்றிருக்கிறது. இவர்கள் நெகேவில் வாழ்ந்தனர் (எண். 24:21; 1 சாமு. 27:10), அவர்களில் ஒரு சிலரை தவிர மற்றவர்கள் வடக்கே செபுலோன் குல மரபு பகுதிக்கு குடிபெயர்ந்தனர் (நியா. 4:11-17). கெனிசியர் மட்டுமே அங்கீகாரம் பெற்றனர் ஏனெனில் காலேபின் மூதாதையர்கள் இவர்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனர் (எண். 32:12; யோசுவா 14:6, 14). காலேப் பன்னிரெண்டு வேவுகாரரில் யோசுவாவோடு இணைந்து கானானிலிருந்து திரும்பி அந்த நாட்டைக் குறிதது நற்செய்தி சொன்னவர் (எண். 13:30; 14:6-9, 24, 30) யோசுவாவோடு இணைந்து போரிட்ட வர்களில் இவரும் ஒருவர். மற்றும் நியாயாதிபதியாகிய ஒத்னியேலிற்கு உறவினராக கூறப்பட்டுள்ளார் (நியா. 1:11-20).

**வசனங்கள் 20, 21. ஏத்திய** மக்கள் கானானில் குடியிருந்தவர்களின் மற்ற பட்டியலில் காணப்படுகின்றனர். அவர்கள் ஆபிரகாம் பிற்பாடு குடியேறின எபிரோன் பகுதியில் வாழ்ந்தனர் (23:1-20 காண்க).

கானானிய மக்களின் பட்டியலில் வழக்கமாக காணப்படுகின்ற மற்றொரு பெயர் பெரிசியராகும். இந்த குல மரபினர் நாட்டின் மத்திய மலைப் பகுதியில் வாழ்ந்தனர் (யோசுவா 11:3) எப்பிராயீம், மனாசே ஜனங்களால் வெளியே துரத்தப்பட்டனர் (யோசுவா 17:15-18). ***ரெப்பாயீமியர்*** சீரியாவின் தெற்கிலும் எருசலேமின் தெற்கிலும் சிதறி பரவி கிடந்தனர், ஆனால் பெரும்பான்மையானோர் கலிலேயாவின் கிழக்கே பாசானில் வாழ்ந்தனர் (14:5ஐ காண்க). குறிப்பிடப்பட்டுள்ள மற்ற இனத்தவர்களின் பெயர்கள் **எமோரியர், கானானியர், கிர்காசியர்** மற்றும் **எபூசியர்களாவார்கள்** (10:15, 16ன் விமர்சனத்தை காண்க).

## பயன்பாடு

### பாதுகாப்பும் பராமரிப்பும் (அதிகாரம் 15)

*அவருடைய அச்சமும் உள சோர்வும்.* ஆபிரகாம் அச்சம் நிறைந்தவராக இருந்தார், தனக்கு எதிர்வரும் ஆபத்தை கண்டு அச்சமடைந்து தனது பாதுகாப்பை குறித்து பயமுற்றார். கிழக்கத்திய அரசர்கள் நான்கு பேர் மீது எதிர்பாராத வெற்றியடைந்து சற்று முன்னர் தான் திரும்பியிருந்தார் (14:16-24), ஆனால் அவர்கள் முன்பை விட வலிவார்ந்த படைகளோடு மீண்டும் வந்தால் என்ன செய்வது? என்கிற எண்ணம் மேலோங்கியிருக்கக்கூடும். அநேகமாக இம்முறை அவர் அதிக கவலை கொண்டதற்குக் காரணம், எண்பது வயதாகியும்[19] தனக்கொரு குழந்தையில்லை என்பதனை உணர்ந்தப்படியினால் இருக்கக்கூடும்.

தீய படைகளின் மீது வெற்றி கொண்ட மனிதர்கள் சில சமயங்களில் இவ்வகையான மன அழுத்தம் மற்றும் அச்சம் போன்ற அனுபவத்திற்குள் செல்வதுண்டு. இதனை குறித்து பல எடுத்துக்காட்டுகளை நாம் காண முடியும் (1) தேவ மனிதனான மோசே. செங்கடலில் பார்வோனின் படைகளிடமிருந்து அவர்களை ஆண்டவர் விடுவித்தப் போதும் மற்றும் பாலை நிலத்தில் அவர்களை பராமரித்தப் போதும் (யாத். 17:4); (2) ஆண்டவருடைய இருதயத்திற்கேற்ற மனிதனாகிய தாவீது, சவுலுடைய உயிரை பாதுகாத்து நீதியையும் இரக்கத்தையும் நிலை நாட்டினப் போது (1 சாமு. 27:1); மற்றும் (3) ஆண்டவருடைய தீர்க்கதரிசியாகிய எலியா, பாகால் மற்றும் அஸ்டரோத் தீர்க்கதரிசிகளின் மேல் ஆண்டவருடைய வெற்றியை பெற்று அவருடைய ஊழியத்தை நிலைநாட்டினபின்னர் (1 இராஜா. 19:1-14).

விசுவாச பெருமக்கள் அனைவரும் உணர்வு நிறைந்தவர்கள், அந்த உணர்வுகளை கவனிக்க தவறுதலோ, அலட்சயப் படுத்துதலோ அல்லது மதியாமலோ இருந்து விடக்கூடாது, ஏனெனில் மனக்-கிளர்ச்சியின் மிகுதியால் எதிர் உச்சத்திற்கு சென்று கிறிஸ்தவத்தை அறிவுசார் மற்றும்

விருப்பம் சார்ந்த ஒன்றெனும் கோணத்தில் காண முயற்சிப்போம்; ஒருவேளை எல்லா உணர்வுகளையும் ஐயப்பாட்டிற்கு இடமாக்கிக் கொள்வோம். இப்படிப்பட்ட மனப்பாங்கு மக்களை அவர்களுடைய ஐயப்பாடு, அச்சம், மற்றும் மன தளர்வு போன்ற சமயங்களில் குற்றவுணர்வு மற்றும் பாதுகாப்பற்ற நிலையினை ஏற்படுத்திவிடும்; ஆனால் ஆண்டவர் அன்புள்ள பரலோக தந்தையாக இருக்கிறார், மேலும் அவர் நம்முடைய பாரங்கள் மற்றும் கவலைகளை அவரோடு பகிர்ந்துக் கொள்ளும் ஒரு நேர்மைமிக்க உறவை வைத்துக் கொள்ள விரும்புகிறார். தம்முடைய பிள்ளைகள் விசுவாசம் மற்றும் உணர்வுகளோடு போராடுகையில் மகிழ்ச்சியாக இருப்பதனைப் போன்று பாசாங்கு செய்வதை ஆண்டவர் விரும்புவதில்லை. மாறாக அவர் நம்மை விசாரிக்கிறபடியால் நம்முடைய பாரங்கள் யாவற்றையும் அவர் மீது வைத்து விட விரும்புகிறார் (1 பேதுரு 5:7). தங்கள் ஐயம் மற்றும் அச்சமிக்க சமயங்களில் விடைக்காக மக்கள் ஆண்டவரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர்களுக்கு அன்பு நிறைந்த மறு உறுதியும், ஊக்கமும் அவரிடமிருந்தும் அவருடைய பிள்ளைகளிடமிருந்தும் தேவைப்படுகிறது.

*ஆண்டவரிடமிருந்து ஆபிரகாமின் ஆறுதல்.* ஆபிரகாம் அச்சம் மற்றும் ஐயம் நிறைந்தவராக இருக்கிறார் என்பதனை ஆண்டவர் அறிந்திருந்தார். அவர் ஆபிரகாமை குற்றச்சாட்டோடு அணுகாமல், அவருடைய அச்சத்தை தணிக்கும் தரிசனத்தோடு அணுகினார். 15 ஆம் அதிகாரம் “கர்த்தருடைய வார்த்தை ஆபிரகாமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே” (15:1 மையப் பகுதி) என்று தொடங்குகிறது. வேதத்தில் முதன்முறையாக “பயப்படாதே” எனும் ஊக்கமூட்டும் சொல் இங்கு தான் இடம் பெறுகிறது. ஆண்டவர் இதனை பல்வேறு நிகழ்வுகளில் பல முறை திரும்பத்திரும்ப கூறியிருக்கிறார்: கேரார் பட்டணத்து மந்தையாளர்களுடனான மோதலுக்கு பிறகு ஈசாக்கிற்கு கூறினார் (26:24); யாக்கோபு எகிப்திற்கு குடிபெயர்கையில் இவ்வாறு கூறினார் (46:3); இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு புறப்படும் போதும் மற்றும் அவர்கள் பாலை நிலத்தில் இருந்தப் போதும் பல முறை கூறியிருக்கிறார் (யாத். 14:13; 20:20; எண். 14:9; உபா. 1:21). ஒவ்வொரு சூழலிலும் ஆண்டவர் தம்மை “நான்” என்றும் அல்லது மோசே அவரைக் குறித்து “தேவன்” அல்லது “யாவே” என கூறி, அவர் என்ன செய்தார்? அல்லது அவர் தமது மக்களுக்கு என்ன செய்வார் என்பதனை தொடர்பு படுத்துகிறார்.

புதிய ஏற்பாட்டில் இயேசு அல்லது தேவதூதர்கள் “பயப்படாதே” எனும் சொல்லை பலமுறை பயன்படுத்தி யிருக்கின்றனர். இந்த சொல்லானது ஆண்டவருடைய பிரசன்னத்தையும் அவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமெனும் விருப்பத்தையும் உறுதிப்படுத்துகிறது. இந்த தேற்றும் சொற்றொடர் சகரியாவிற்கும், யோசேப்பிற்கும்,

மரியாளுக்கும், சீஷர்களுக்கும் பவுலுக்கும் மற்றும் யோவானுக்கும்[20] கூறப்பட்டுள்ளது. ஆண்டவர் ஆபிரகாமைப் பார்த்து பயப்படாதே என கூறுகையில், அவனுடைய பெருந்தேவை கூடுதலான வாக்குத்தத்தமல்ல மாறாக யாவே தன்னுடன் இருக்கிறார் தன் வாழ்வில் எப்போதும் செயல்பட்டு ஆசீர்வதிப்பார் எனும் உண்மையினை மறு உறுதிப்படுத்த வேண்டுமென்பதனை நன்கு அறிந்தவராக இருந்தார்.

"நான் உனக்கு கேடகமாக [מָגֵן, *magen*] இருக்கிறேன்" என கூறி (15:1), ஆண்டவர் தமது உரையாடலை தொடருகிறார். இப்படி கூறுகையில் ஆபிரகாமின் ஆபத்துக் காலத்தில் அவர் பாதுகாப்பின் கேடகமாக இருப்பதாக பொருள்படுத்தினார். பவுல் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்வர்களை பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய் "விசுவாசமென்னும் கேடகத்தை" எடுத்துக் கொள்ள வற் புறுத்துகிறார் (எபே. 6:16).

மெத்த படித்த கிறிஸ்தவர்களின் புரிதலுக்கு இப்படிப்பட்ட ஆலோசனை முரண்பட்டதாக தெரியும். ஆண்டவர் மற்றும் கிறிஸ்து மீது நாம் வைக்கும் விசுவாசம் எளிதல் உடையக் கூடிய ஒன்றாக இருக்கிறதென்றும் அதற்கு வரும் எதிர்ப்பையும், அச்சுறுத்தலையும் நாம் தவிர்க்க வேண்டும் மற்றும் அதனை அனைத்து சூழலிலும் பாதுகாக்க வேண்டுமென்கிற நிலை ஏற்படுமென அவர்கள் நினைக்கின்றனர். உருவகமாக கூறுவதெனில் ஒருவரும் பறிக்காத வண்ணம் நாம் நம்முடைய விசுவாசத்தை (கேடகத்தை) நமது ஆடைக்குள் (கவசத்திற்குள்) மறைக்க வேண்டும் என்பதாகும். பவுல் இதற்கு நேர் எதிராக கூறுவது போன்று காணப்படுகின்றது, "விசுவாசத்தை [உங்கள் கேடகத்தை] நீங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டியதில்லை. உங்கள் முன் அதை வைத்து பயிற்சி செய்யுங்கள், அது உங்களைப் பாதுகாக்கும்!" என நமக்கு கூறுகிறார்.

அடுத்தப்படியாக ஆண்டவர் உனக்கு மகா பெரிய "பலனுமாயிருக்கிறேன்" என கூறி ஆபிரகாமைத் தேற்றினார் (15:1 பிற்பகுதி). இந்த சூழலில் மூதாதையர் ஆபிரகாம் இந்த வாக்குத்தத்தத்தினால் திருப்தி கொள்ளவில்லை. எனவே இதனை ஊர் எனும் பட்டணத்தை விட்டு வந்து பல ஆண்டுகளாக ஆண்டவர் அவருக்கு செய்தவற்றிற்கு ஆண்டவரை அவர் பாராட்ட தவறிவிட்டார் என பொருள் கொள்ளக் கூடாது. ஐயத்திற்கு இடமின்றி, ஆபிரகாம் ஆண்டவர் அவருக்கு அளித்த பெருஞ் செல்வத்திற்கும், மந்தைகளுக்கும், மாடுகளுக்கும், எதிரிகளிடமிருந்து கிடைத்த ஆண்டவரின் பாதுகாப்பிற்கும் மற்றும் கானான் தேச வாக்குத்தத்தத்திற்கும் நன்றியுடையராக இருந்தார்; எனினும் அவருக்கு இந்த ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள "சுதந்திரவாளி" இருக்கவில்லை. இந்த ஆழமான கவலை அவரை ஆண்டவருடன்

நேர்மையாக இருக்கவும் தன் இருதயத்தில் இருப்பவற்றை வெளிப்படுத்தவும் முன்னடத்தியது.

*ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தின் மீது அவர் ஏமாற்றமடைதல்.* முக்கியமாக ஆபிரகாமிற்கு இயற்கையான சுதந்திரவாளி இல்லாத காரணத்தினாலேயே அவர் ஏமாற்றம் அடைந்தார். பண்டைய காலத்தில் ஒரு இணையினர் மணமுடித்தவுடன் ஆண்டவர் அவர்களை பிள்ளைகளால் ஆசீர்வதிக்க வேண்டுமென்பதே முதன்மையான ஏக்கமாக இருந்தது, அவர்களுடைய மலட்டுதன்மையை அவர்கள் மீது ஒரு சாபம் எனும் கோணத்தில் பார்க்கப்பட்டது (25:21; 30:1, 2; 1 சாமு. 1:1, 2, 7, 19).

ஒரு நாளில் ஒரு வலிமை நிறைந்த ஜாதியாக மாறுவாரென ஆண்டவர் திரும்பத் திரும்ப வாக்குப் பண்ணியிருந்தாலும், ஆபிரகாம் எண்பது வயதினை கடந்தும் சாராள் - எழுபது வயதினை கடந்தும் - பிள்ளையில்லாமல் இருந்தனர் காண்க (12:4; 16:3; 17:17 பார்க்க). பிள்ளைகள் இல்லாதிருந்தது பெரும் பாரமாக கிடந்து, ஆபிரகாமின் இருதயத்தில் பெரும் வருத்தத்தை உண்டாக்கியது. தனக்கும் தனது மனைவிக்கும் வயது விரைந்து கடக்கையில், ஆண்டவர் தமது வாக்குத்தத்தத்தை எப்படி நிறைவேற்றப் போகிறார் என்பதனை கற்பனை செய்து பார்க்க இயலவில்லை. ஏனெனில் இந்த மூதாதையர் காலந்தாழ்த்திய நம்பிக்கையோடு பல ஆண்டுகள் காத்திருந்தார், ஏமாற்றம் அவரது ஆத்துமாவை நிறைத்தது; மேலும் மனவருத்தம் இயல்பாகவே பின்தொடர்ந்தது. அவருக்கு ஒரு பிள்ளையை கொடுக்க ஆண்டவர் எதனையும் செய்யவில்லை என்பதாக காணப்பட்டது; எனவே தான் அவருக்கு பிள்ளையற்றிருப்பதனை ஆண்டவரிடம் முறையிட்டு, தமஸ்குவை சேர்ந்த எலியேசரை அவருக்கு வாரிசாக ஏற்படுத்தியதாக கூறுகிறார் (15:2, 3).

ஆண்டவர் தமது வாக்குத்தத்தத்தை சிறப்பாக குறிப்பிட்டு தேற்றினார். ஆண்டவருடைய வார்த்தை மீண்டும் ஆபிரகாமிற்கு வந்த போது, எலியேசர் அவருடைய சுதந்திரவாளியாக இருப் பதில்லையென கூறினார். அவருடைய சொந்த உடலிலிருந்து வரும் ஒரு பிள்ளை, அந்த பிள்ளையிலிருந்து வரும் வழிமரபு ஆபிரகாமிற்கு வாக்குப்பண்ணின அனைத்து ஆசீர்வாதங்களையும் சுதந்தரித்துக் கொள்ளும் என உறுதிமொழிந்தார் (15:4). ஆண்டவர் ஒரு சித்தரிப்போடு தமது வாக்குத்தத்தத்தை தொடருகிறார். அவர் வானத்து விண்மீன்களை அவரால் எண்ணக் கூடுமானால் எண்ணும்படி ஆபிரகாமிற்கு கூறினார். “உன் சந்ததி இவ் வண்ணமாய் இருக்கும்” என கூறி தமது வார்த்தைகளை நிறைவு செய்தார் (15:5) நாம் அனைவரும் கற்க வேண்டிய பாடமாகிய ஆண்டவருடைய சித்தம் அவருடைய வழியில் அவருடைய அட்டவணைப்படி நிறைவேற வேண்டும் என்கின்ற கடினமான விசுவாச பாடத்தை ஆபிரகாமும் சாராளும் கற்க

வேண்டியிருந்தது. நீதிமான்களுக்கு வரும் ஆசீர்வாதம் அல்லது துன்மார்க்கர் மேல் வரும் தண்டனை ஆகியவற்றின் தாமதப்படும் உணர்வோடு ஆண்டவருடைய பிள்ளைகள் எப்போதுமே போராடியிருக் கின்றனர்.

ஆண்டவர் தாமதிக்காமல் தமது “உறக்கத்தை” விட்டு “விழித்து” தமது மக்களை “என்றைக்கும்” “புறக்கணித்து” விடாதபடி சங்கீதக்காரர் அவரை நோக்கி மன்றாடுகிறார் (சங். 44:23). ஜாதிகளுக்குள்ளே சிதறடிக்கப்பட்டிருக்கிற இஸ்ரவேலரில் “ஒடுக்கப்பட்டவர்களையும்” “நொறுக்கப்பட்டவர்களையும்” ஆண்டவர் மறந்து போனதாக அவர் விசுவாசித்தார் (சங். 44:11, 24; காண்க 9:19; 102:13). அதே போன்று எரேமியா தனது நாற்பதாண்டு ஊழியக் காலத்தில் விரக்தியையும் திகிலையும் தனது ஆறு புலம்பல் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். ஆண்டவர் ஏன் பொல்லாதவர்கள் மேல் நியாயத்தீர்ப்பை செலுத்த தாமதப் படுத்துகிறார் என அவரால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. தீர்க்கதரிசி தமது ஊழியத்தில் உண்மையுள்ளவராக இருந்தார், ஆனால் மக்கள் அவரை பரிகசித்து அவரைக் குறித்து ஏளனம் செய்தனர். அவர் வளர்ந்த பட்டணத்து மக்களும் அவருடைய நெருங்கிய உறவினர்களும், அவரை பெயரிட்டழைத்து, அவருக்கெதிராக சதி திட்டமிட்டு மற்றும் அவரது வாழ்க்கையை முடித்து விட எண்ணினர் (எரே. 11:18-23; 15:10-18; 17:14-18; 18:18-23; 20:7-18).

புதிய ஏற்பாட்டில் பொல்லாதோரையும் நீதிமான்களையும் நியாயந்தீர்க்க ஆண்டவர் வருகிறாரெனும் சிந்தனையைக் குறித்து பரிகசிப்போரை பேதுரு நன்கு அறிந்திருந்தார். ஆண்டவருடைய “வாக்குத்தத்தம்” தாமதிப்பது அவர்களுடைய தூஷணத்திற்கு காரணமாக அமைந்துவிடுகிறதென அவர் குறிப்பிட்டிருக்கிறார். எப்படியாயினும் “அனைவரும் மனந்திரும்ப வேண்டுமென” விரும்பியே ஆண்டவர் தாமதப்படுத்துவதாக இந்த அப்போஸ்தலர் கூறுகிறார் (2 பேதுரு 3:3, 4, 9). இரத்த சாட்சிகளான நீதிமான்கள் “பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டுவதாக” சித்திரிக்கப் பட்டுள்ளது (வெளி. 6:10).

மனித காரணங்களால் கண்டுணர இயலாத நோக்கங்களை ஆண்டவர் வைத்திருக்கிறார். ஒருவேளை ஆண்டவருடைய வாக்குறுதி தாமதமாகுதலைக் குறித்து முறையிட்ட ஒரே நபர் ஆபிரகாமாக இருக்கக்கூடும், ஆனால் அவர் இறுதியானவரல்ல. ஆபிரகாம் மற்றும் சாராள் ஆகியோர் ஈசாக்கினை கருத்தரிப்பதற்கு தங்கள் சரீரம் “செத்துப் போகும்வரை” ஆண்டவர் காத்திருப்பதனை குறித்து எந்த எண்ணமும் கொண்டிருக்கவில்லை (ரோமர் 4:19). இதன் காரணம் என்னவெனில் “ஆண்டவரால் கூடாதது ஏது மில்லை” என்பதனை மெய்ப்பிப்பதாகும்

(18:14). இப்படி உயிர் கொடுக்கும் வல்லமையை வெளிக்காட்டுவதன் மூலம் மகிமை அனைத்தும் தம்முடையது என்பதனை ஆண்டவர் உறுதிப் படுத்துகிறார். எதிர்கால தலைமுறையினர் அவரே மெய் தேவன் என விசுவாசித்து அவரை முழு விருப்பத்துடன் சேவிக்க வேண்டும் என்பதற்கு ஒரு காரணத்தினை அவர் கொடுக்கிறார். எல்லா காலங்களிலும் இருக்கின்ற ஆண்டவருடைய பிள்ளைகளைப் போன்று விசுவாசிகளின் தந்தையும் “விசுவாசத்தோடு காத்திருக்க வேண்டும்” எனும் பாடத்தை கற்றுக் கொள்ள வேண்டியதாக இருந்தது (ஏசாயா 40:31).

*அவருடைய விசவாச மறுமொழி.* ஆண்டவர் ஏற்கெனவே செய்தது? போன்று அவர் யார் எனும் நற்செய்தியையும், அவர் மனிதர்களை? ஆசீர்வதிக்க என்ன செய்கிறார் என்பதனையும் மறுபடியும் ஆபிரகாமிற்கு பிரசங்கிக்கிறார். அவருடைய சரீரத்தின் வழியாக மகனொருவர் வருவார் அவருடைய வழிமரபினர் வானத்து விண்மீன்களைப் போன்று எண்ணிக்கைக்கு அடங்காமல் இருப்பார்கள் என்பதனை ஆபிரகாமிற்கு ஆண்டவர் உறுதிப்படுத்தினார். இந்த நற்செய்திக்கு மறுமொழியாக, [ஆபிரகாம்] அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார் (15:6). எப்படியாயினும் இது முற்பிதாவின் விசுவாசத்தினுடைய தொடக்கமல்ல. எபிரெய நிருபத்தின் ஆக்கியோன் மெசபொத்தோமியா நாட்டினின்று ஆபிரகாம் அழைக்கப்பட்ட போது “விசுவாசத்தினாலே” கீழ்ப்படிந்தாரென கூறியிருக்கிறார், அவர் போகும் போது “தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்” எனவும் கூறியுள்ளார் (எபி. 11:8).

ஒரு மனிதர் ஆண்டவரோடு இணைந்து நடக்க கற்றுக் கொள்ளும் போது அவர் விசுவாச அளவில் வளருகிறார் என்பதனை வேதம் நமக்கு எடுத்துரைக்கிறது. ஆண்டவருடைய சீஷர்கள் தங்கள் பணிகளை விட்டு அவரை விசுவாசித்து பின் சென்றனர், ஆனால் ஒருமுறை “அற்ப விசுவாசம்” கொண்டிருந்ததினால் கடிந்து கொள்ளப்பட்டனர் (மத். 6:30; 8:26; 16:8; 17:20). சீஷர்கள் பெரும் விசுவாசத்தின் தேவையினை உணர்ந்திருந்திருந்தனர், எனவே தான் தங்கள் விசுவாசம் பெருக “வேண்டுமென வேண்டினர்” (லூக். 17:5) பல சமயங்களில் பல நபர்களை “பெரும் விசுவாசத்தை” பெற்றிருப்பதாக இயேசு கிறிஸ்து பாராட்டி யிருக்கிறார் (மத். 8:10; 15:28). மேலும் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்த பலர் இன்னமும் பாவக்கட்டுக்குள் இருந்தபடியால் மீட்படையவில்லை என்பதனை யோவான் நற்செய்தி நூலின் வழியாய் நாம் அறிய வருகிறோம் (யோவான் 8:31-44) இயேசு கிறிஸ்துவை “விசுவாசித்த” சில குறிப்பிட்ட யூத அதிகாரிகள்; ஜெபாலயங்களிலிருந்து புறம்பாக்கப்படுவோம் என பயந்து அவரில் உள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யவில்லை. “அவர்கள் தேவனால் வருகிற

மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்" (யோவான் 12:42, 43).

இயேசு கிறிஸ்துவினுடைய சீஷர்களின் விசுவாசத்தைப் போன்றே ஆபிரகாமின் விசுவாசமும் இருந்தது. அவர் ஆண்டவரோடு நடக்கத் தொடங்கினார், ஆனால் பல சமயங்களில் அவரது விசுவாசம் குறைவானதாக இருந்தபடியினால் பெருக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சீஷர்கள் தங்களுடைய விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் வளரவும் முதிர்ச்சியடையவும் சிரமப்பட வேண்டியதாயிருந்தது. அவர்கள் இயேசு கிறிஸ்துவை பின்பற்றி, ஏறக்குறைய மூன்று வருடங்கள் அவருடன் வெளிப்படையாக இணைந்திருந்தனர்; எனினும் அவர் தோட்டத்தில் வைத்து கைது செய்யப்பட்ட போது அச்சம் அவர்களை மேற்கொண்டது, முடிவில் அவர்கள் அந்த இரவே விட்டோடிப் போனார்கள்.

ஆபிரகாம் யாவேயை உன்னதமான தேவன் என கூறி அவர் மேலுள்ள தனது விசுவாசத்தை சாலேமின் அரசர் மெல்கிசேதேக்கின் முன்பும், எமோரிய சகோதரர்கள் (14:22-24) முன்பும் வெளிப்படையாக அறிக்கையிட்டார். ஆபிரகாமினுடைய வாழ்க்கையில் இந்த சூழலில் ஆண்டவருடைய வாக்குறுதியை விசுவாசித்தது மட்டுமன்றி, தனிப்பட்ட விதத்தில் அவரில் விசுவாசம் கொண்டார்; அவர் ஏற்கெனவே அர்ப்பணித்ததை விட ஆழமாக அர்ப்பணித்தார். எனவே தான் வசனம் "அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" என கூறுகிறது (15:6). பவுல் இந்த சிந்தனையை ரோம நிருபத்தில் நீதிமானாக இருப்பதற்கு இரண்டு சாத்தியமான வழிகளை சுட்டிக் காட்டுகிறார்: ஒன்று (1) அந்த நிலைக்கு வர போதுமான அளவு நற்கிரியை செய்து நீதியை பெற்றுக் கொள்ள வேண்டும், அல்லது (2) இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதின் வழியாய் ஆண்டவருடைய கிருபாவரமாக நீதியினை பெற்றுக் கொள்ள வேண்டும் (ரோமர் 4:1-5). நற்கிரியை செய்து ஆண்டவருடைய கண்களின் முன் நீதிமானாக நிற்பதற்கு தகுதியினை பெற இயலுமெனில் "பார் நான் செய்து விட்டேன்!" என்று கூறி பெருமை கொள்ள ஏதுவாக இருக்கும். எப்படியாயினும் இது இயலாத ஒன்று! "தகுதியற்ற எனக்கு இயேசு கிறிஸ்துவின் வழியாய் ஆண்டவர் எனக்கு செய்தவனை பார்" என்று மட்டுமே நாம் கூறக்கூடும். மீட்பென்பது மனித சாதனைகளால் கிடைக்கப் பெறுவதல்ல, மனித இனம் கிருபையால் "நீதியின் வரத்தை" பெற்றுக் கொள்ள உலகத்தின் பாவத்திற்காக மரித்த தெய்வீக பலியான இயேசு கிறிஸ்துவின் வழியாய் மட்டுமே மீட்பு கிடைக்கப் பெறுகிறது (ரோமர் 3:20-22; 5:17). ஆண்டவர் "ஆபிரகாமிற்கு செய்தது போன்றே" நம்மையும் விசுவாசத்தினாலே நீதிமானாக எண்ணுகிறார். நாம் "கிறிஸ்துவிற்குள்ளாக ஞானஸ்நானம்" பெற்றிருக்கிற படியால் ஆபிரகாமிற்கு அளிக்கப்பெற்ற தெய்வீக

வாக்குத்தத்தத்தின்படி நாம் அவருடைய பிள்ளைகளாகவும் "சுதந்திரவாளிகளாகவும்" மாறுகிறோம் (கலா. 3:26-29).

அவருடைய விசுவாசம் உறுதியாக்கப்பட்டது: நற்செய்தியினை கூறி, மூதாதையராகிய ஆபிரகாமிற்கு ஆண்டவர் தாம் யார் என்பதனையும் அவர் அவருக்கு என்ன செய்திருக்கிறார் என்பதனையும் முதலில் உணர்த்தி அவரது விசுவாசத்தை உயர்த்திப் பிடிக்க ஆண்டவர் உதவி செய்தார். பின்னும் அவர் அவனை நோக்கி: "இந்தத் தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும்பொருட்டு, உன்னை ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து அழைத்துவந்த கர்த்தர் நானே" என்றார் (15:7). பவுல் ரோமாபுரி மற்றும் கொரிந்து பட்டணங்களில் இதைப் போன்றதொரு காரணங்களுக்காகவே நற்செய்தியை பிரசங்கிக்க விரும்பினார். இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலம் ஆண்டவர் என்ன செய்தார் என்பதனை எடுத்துக் கூறி கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை பலப்படுத்தவும் உறுதிப்படுத்தவும் இப்படிச் செய்தார் (ரோமர் 1:15, 16; 1 கொரி. 15:1-4).

முறையாக கையாண்டு, நினைவுத்திறன் தூண்டப்படுமானால் விசுவாசமும் நம்பிக்கையும் தனித்தனியானது என்பதனை நாம் அறியலாம். நிகழ்கின்ற பிரச்சனை என்னவெனில் நாம் நினைவில் கொள்ள வேண்டியதை மறந்தும், மறக்க வேண்டியதை நினைவில் வைத்துக் கொள்வதுமேயாகும். நமக்கும் நம்முடைய அன்பானவர்களுக்கும் எதிராக நடைபெற்ற குற்றங்கள் அரிதாய் மறக்கப்பட வேண்டியவைகள், எனினும் சில கிறிஸ்தவ வாழ்வு முறை கோட்பாடுகள் நினைவில் வைத்துக் கொள்வதற்கு கடினமானவைகள். குற்ற உணர்வு அல்லது கசப்புணர்வு கிறிஸ்துவிற்குள்ளான நமது மகிழ்வை களவாடி, மற்றவர்கள் முன்பு நமது சாட்சியை கெடுத்துவிடும்.

பவுல் தனது மனமாற்றத்திற்கு முன்னர் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தினதை அல்லது யூத மார்க்கத்தாராலும் கள்ள சகோதரர்களாலும் வந்த மோசடியை எண்ணி மகிழ்வற்ற நிலையில் குற்ற உணர்வால் நிறைந்து இருக்கக்கூடும். எனினும் "ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் (பிலி. 3:13, 14) என கூறினார். அவருக்கு இரக்கத்தைக் காட்டி மன்னிப்பை தந்து, அவரது வாழ்வை முற்றிலும் மாற்றி மற்றும் அவரை மற்றவர்களுக்கு நற்செய்தியை பிரசங்கிக்க அனுப்பின ஆண்டவரை மகிமைப்படுத்தவே தனது முந்தைய பாவங்களை பவுல் குறிப்பிடுகிறார். பவுல் தனது தனிப்பட்ட வரலாற்றை, நலமற்ற கடந்த காலத்தை நினைவுபடுத்தி ஒப்புவிப்பதாக இராமல்; பாவிகளில் பிரதான பாவியாக இருந்த என்னை "ஆண்டவர் அன்புகூர்ந்து, மன்னித்து மற்றும் மீட்கக்

கூடுமெனில், எத்தகைய பாவம் செய்தவர் எவராக இருப்பினும் அவர்களுக்கெல்லாம் மீட்படையும் நம்பிக்கையுண்டென்பதனை குறிப்பிடவே எடுத்துரைக்கிறார்" (அப். 9:1-22; 22:3-21; 26:2-23; 1 தீமோ. 1:12-17 பார்க்க). ஆகியவற்றைக் காண்க.

இரண்டாவதாக, ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்து, அவரது வழிமரபினர் கானான் நாட்டினை அடைவர் என உறுதி கூறுகையில் ஆண்டவர் அவருடைய விசுவாசத்தினை உறுதிப்படுத்தினார். பண்டைய உலகில் உடன்படிக்கைகள் எளிதில் ஏற்படுத்தப்படுவதும் அல்ல விளையாட்டுப் போக்காக முறித்துக் கொள்ளப்படுவதுமில்லை. உடன்படிக்கையை மீறுவது அபாயகரமான செயலாக இருந்து, அதனை மீறுகிறவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டது காண்க (எரே. 34:12-22 பார்க்க). உடன்படிக்கைகள் பெரும்பாலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விலங்குகளின் இரத்தத்தால் ஏற்படுத்தப்பட்டு, மேலும் அந்த உடன்படிக்கை காக்கப்படும் என ஆண்டவருடைய சமூகத்தில் வைத்து அங்கீகாரம் பெறப்பட்டது.

இந்த நிகழ்வில் உடன்படிக்கையை உறுதி செய்ய விலங்குகளை ஆபிரகாம் கொன்றிருப்பினும், ஆண்டவர் மட்டுமே உறுதி மொழிந்தார். இது எதிர்காலத்தினை கவனத்தில் கொண்ட சொற்றொடராக அமைந்திருந்தது: அப்பொழுது அவர் ஆபிராமை நோக்கி: "உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய்" (15:13). இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் "நியாயந்தீர்ப்பேன்," "பின்பு மிகுந்த பொருள் களுடனே புறப்பட்டு வருவார்கள்" என ஆண்டவர் வாக்குப் பண்ணினார் (15:14). இறுதி உத்திரவாதமாக "எகிப்தின் நதி துவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதுமான இந்த நிலத்தை உன் வழிமரபினருக்கு கொடுத்தேன்" என்பதை மீண்டும் வலியுறுத்தினார் (15:18).

இந்த உடன்படிக்கையில் காணப்படும் பல அம்சங்கள், சீனாய் மலையில் மோசேயின் வழியாய் இஸ்ரவேலருடன் செய்த உடன்படிக்கையிலும் காணப்படுகின்றது. ஆபிரகாமுடைய உடன்படிக்கையினைப் போன்றே ஆண்டவர் யார் மற்றும் இஸ்ரவேலர்களை ஆசீர்வதிப்பதற்கும், மீட்பதற்கும் அவர் என்ன செய்தார் எனும் நற்செய்தியுடன் இந்த உடன்படிக்கை தொடங்குகிறது: "உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே" (யாத். 20:2). அதன் பின்னர் "ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் மாறுவதற்கு" (யாத். 19:6) வழிகாட்டிகளாக இருக்கும் பத்து கட்டளை மற்றும் பல சட்டங்களுடன் இது தொடருகிறது (யாத். 20:3-23:33). அடுத்ததாக மோசே வந்து, "கர்த்தருடைய வார்த்தைகள் யாவையும் நியாயங்கள்

யாவையும் ஜனங்களுக்கு அறிவித்தான், அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் ஏகசத்தமாய்: கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம்" என்று பிரதியுத்தரம் சொன்னார்கள் (யாத். 24:3) பின்னர் தகனபலிகளாகவும், சமாதான பலிகளாகவும் விலங்குகள் பலியிடப்பட்டது, மேலும் மோசே கொஞ்சம் இரத்தத்தை எடுத்து பலிபீடத்தின் மேல் தெளித்தார். மக்களையும் ஆண்டவரையும் உடன்படிக்கையில் இணைக்கும் விதமாக மேலும் கொஞ்சம் இரத்தத்தை எடுத்து மக்கள் மேல் தெளித்தார். இது நிறைவு பெற்றபின் அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான் (யாத். 24:8).

அதன் பின்னர் வேதத்தின் ஆக்கியோன்கள் உலகத்தின் பாவத்தை போக்கும் பலியாக இரத்தத்தை சிந்தின இயேசு கிறிஸ்துவை ஆட்டுக்குட்டியாக சித்தரிக்க இந்த சிந்தனையை பயன்படுத்திக் கொண்டனர் (ஏசாயா 53:10, 12; யோவான் 1:29, 36; ரோமர் 3:25; 1 யோவான் 1:7; 2:2). பஸ்கா இரவின் போது திரு விருந்தினை தொடங்கி வைக்கையில் அப்பத்தை குறித்து "இது என் சரீரம்" என்றும்; பாத்திரத்தை குறித்து "இது பாவமன்னிப் புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன் படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என தமது சீஷர்களிடம் கூறினார் (மத். 26:26, 28). ஆபிரகாமின் உடன்படிக்கையிலும் மோசேயின் உடன்படிக்கையிலும் இரத்தப் பலிகள் ஆண்டவர் மற்றும் அவரது மக்களுடனான உறவை உறுதிப்படுத்துவது போன்று, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் ஆண்டவருடைய பிள்ளைகளாக நமது உறவை உறுதிப் படுத்துகிறது. விலங்குகளின் பலிகள் கானான் நாட்டின் ஆசீர்வாதத்தினை முத்திரையிட்டிருக்கையில், பூரணமான ஒரேதரம் பலியான நமது இயேசு நமக்கு "மேன்மையான நாடாகிய" "பரலோக நாட்டின்" ஆசீர்வாதத்தை தருகிறார் (எபி. 11:16; காண்க 12:22).

*முடிவுரை.* வாக்குப்பண்ணப்பட்டதை பெற்றுக் கொள்ள நாம் நம்முடைய ஆண்டவருக்கான அர்ப்பணிப்பில் உண்மையுள்ளவர் களாக இருந்து "ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயத்தை" வளர்த்துக் கொள்ளக் கூடாது (எபி. 3:12). இஸ்ரவேலரின் முதல் தலை முறையினருக்கு நடந்தது இதுவே, அவர்கள் அவர்களுடைய உடன்படிக்கையின் அர்ப்பணிப்பை விட்டு விலகிவிட்டு, ஆண்டவரை புறக்கணித்து பாலை நிலத்தில் மாண்டு போயினர். ஆகையால் அவர்கள் வாக்குப்பண்ணப்பட்ட நாட்டில் ஒருபோதும் "ஓய்வை" அனுபவிக்கவில்லை (எபி. 4:3). முதல் நூற்றாண்டில் யூத கிறிஸ்தவர்களில் சிலர் புதிய உடன்படிக்கையின் கீழ் கிறிஸ்து தான் ஒரே பலி என்பதனை விட்டு விலகிவிடும் பேராபத்தில் இருந்தனர்

(எபி. 10:26). அவர்களுடைய செயல்களும் இயல்புகளும் தீவிரமான தவறுகளென எச்சரிக்கப்பட்டனர் தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்த மென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள் (எபி. 10:29). எபிரெய நிருபத்தின் ஆக்கியோன் ஆண்டவரிடம் மீண்டும் திரும்பும்படி இவர்களை கடிந்துகொண்டார், அப்படியில்லையெனில் "கொடிதான ஆக்கினை" அவர்களுக்காக காத்திருக்கிறது என கூறினார் (எபி. 10:29).

ஆண்டவருடைய பிள்ளைகளுக்கு எல்லா காலத்திலும் அதே விதமான எச்சரிக்கை கொடுக்கப்படுகிறது. நமது மீட்பும் நித்திய முடிவும் கிறிஸ்துவின் பலியில்லாமல் பாதுகாப்பாக இருக்கிறது எனும் எண்ணத்தில் கிறிஸ்துவின் பலியை சொற்களாலேயோ அல்லது செயல்களாலேயோ ஒருக்காலமும் நமக்கு சாதகமாக எடுத்துக் கொண்டு அல்லது இழிவுபடுத்தி விடக்கூடாது. "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர் களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என பேதுரு பறை சாற்றுகிறார் (அப். 4:12).

## ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தின் நிபந்தனையின் இயல்பு (15:7-21)

இஸ்ரவேல் நாடு (பண்டைய கானான்) யூத மக்களுக்கு மட்டுமே உரியது ஏனெனில் ஆண்டவர் அதனை அவர்களுக்கு நிபந்தனையற்ற மற்றும் மாற்ற முடியாத வரமாக.[21] கொடுத்துவிட்டார் எனும் கருத்துக்கோணம் தற்காலத்தில் சிலரால் தழுவிக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும் இதன் பிரதிநிதிகள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் பல அதன் இயல்பில் நிபந்தனைகளை கொண்டிருக்கிறது எனும் கருத்தினை ஏற்றுக் கொண்டாலும், நாட்டை குறித்தவைகள் நிபந்தனைகளை கொண்டிருப்பதில்லை ஏனெனில் ஆண்டவர் ஆபிரகாமிற்கு வாக்களிக்கையில் அவருக்கும் அவருடைய வழிமரபினருக்கும் கானான் நாட்டினை என்றென்றைக்கும் தருவதாக உறுதிக் கூறியிருந்தார் என சிலர் கூறுகின்றனர். எப்படியாயினும் ஆண்டவரையும் அவருடைய பண்புகளையும் தவிர்த்து "என்றென்றைக்கும்" (עוֹלָם, *'olam*) ஒலம் எனும் பதம் "ஒரு காலத்திற்கு" அல்லது நிச்சயமற்ற காலத்திற்கு (குறுகிய அல்லது நீண்ட) மட்டுமே நீடிக்கும் கொள்கைகளையும் நடைமுறைகளையும் குறிப்பிடுகின்றதேயல்லாமல் "நித்தியத்தை" குறிப்பிடுவதில்லை. மேலும் தீர்க்கதரிசனங்களும் வாக்குத் தத்தங்களும் தெய்வீக உறுதியோடு கூறப்பட்டிருப்பினும் அவைகள்

நிபந்தனையுள்ளவைகள் என்பதனை நாம் கண்டிப்பாக அறிந்திருக்க வேண்டும்.

1. *நில வாக்குத்தத்தத்தின் நிபந்தனையின் இயல்பு.* கானான் நாட்டில் பிரவேசிப்பதற்கு சற்று முன்னர் மோசே பாலை நிலத்தில் இஸ்ரவேல் மக்களுக்கு ஆற்றிய பிரசங்கம் ஒன்றில் கீழ்கண்டவாறு மக்களை தெளிவாக எச்சரித்தார்,

> உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களாகிய உன் *பிதாக்களுக்கு ஆணையிட்டுக்* [שָׁבַע, *shaba*] ஷாபா கொடுத்த தேசத்தில் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணும் போதும் … கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிரு … *உன் தேவனாகிய கர்த்தருடைய கோபம் உன்மேல் மூண்டு, உன்னைப் பூமியில் வைக்காமல் அழித்துப்போடாதபடிக்கு,* உங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களின் தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றாதிருப்பீர்களாக … உன் நடுவிலிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறாரே (உபா. 6:10-15; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

மோசேயின் கூற்றுப்படி இஸ்ரவேல் ஆண்டவருக்கு உண்மையற்றுப் போனால் அவர்கள் நாட்டை மற்றுமல்லாமல் அவர்கள் இருந்த இடம் தெரியாமல் அழிந்துப் போவார்கள். ஆண்டவர் இஸ்ரவேலர்கள் நாட்டில் வாழ்வதனை குறித்து உறுதிபடக் கூறியிருந்தாலும், அதன் தடையின்றி செல்லும் நிறைவேறுதல் நிபந்தனையுள்ளதாக இருந்தது.

உடன்படிக்கையின் ஆசீர்வாதம் மற்றும் சாபங்களுக்கு நடுவில் (உபா. 28:1-21) “செவிகொடுக்கும் போது” “செவி கொடுப்பாயானால்” ஆகிய சொற்கள் இஸ்ரவேலர் களோடு ஆண்டவர் எற்படுத்தின உடன்படிக்கையின் நிபந்தனை இயல்பை வலியுறுத்துகிறது:

> அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார் … *நீ உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவர் வழிகளில் நடக்கும்போது, கர்த்தர் உனக்கு ஆணையிட்டபடியே* [சாபா, *shaba*], *உன்னைத் தமக்குப் பரிசுத்த ஜனமாக நிலைப் படுத்துவார் …* உனக்குக் கொடுப்பேன் என்று கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்ட [சாபா, *shaba*] தேசத்தில், கர்த்தர் உன் கர்ப்பத்தின் கனியிலும், உன் மிருகஜீவன்களின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடுவார்…. உன் தேவனாகிய கர்த்தருடைய … சத்தத்திற்குச் செவிகொடாதே போவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும். நீ சுதந்தரிக்கும் தேசத்தில் கர்த்தர் உன்னை நிர்மூலமாக்குமட்டும் கொள்ளை நோய் உன்னைப் பிடித்துக்கொள்ளப்பண்ணுவார் (உபா. 28:1-21; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

ஆண்டவர் கானான் நாட்டை இஸ்ரவேலருக்கு தருவதாக வாக்குப்பண்ணியிருந்தாலும், அந்த வாக்குறுதிகள் அவருக்கு மக்களுடைய கீழ்ப்படிதலின் அடிப்படையில் நிபந்தனைக் குட்பட்டவைகள் என்பது திண்ணம். மேலும் வேத எழுத்தாளர்கள் அந்த உறுதியினை இருபக்கம் கருக்குள்ளதென வகைப் படுத்துகின்றனர். இஸ்ரவேலர்கள் ஆண்டவருக்கு கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதத்தை பெறுவர், கீழ்ப்படியாமற் போகும் பட்சத்தில் சாபத்தை பெறுவர். கி.மு 605 ஆண்டில் முதலில் சிறை சென்றவர்களில் ஒருவரான தானியேல் இஸ்ரவேலர்கள் நாட்டை இழந்து பாபிலோனுக்கு சிறை சென்றதனை குறித்து இவ்வண்ணமாக கூறுகிறார்.

> இஸ்ரவேலர் எல்லாரும் உமது நியாயப்பிரமாணத்தை மீறி, உமது சத்தத்துக்குச் செவிகொடாமல் விலகிப்போனார்கள். அவருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; *ஆகையால் தேவனுடைய தாசனாகிய மோசேயின் நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சாபமும் ஆணையாக்கினையும்* [שְׁבוּעָה, *shebu'ah*] *எங்கள் மேல் சொரியப்பட்டன.* எருசலேமில் சம்பவித்ததுபோல வானத்தின்கீழ் எங்கும் சம்பவியாதிருக்கிற பெரிய தீங்கை எங்கள்மேல் வரப்பண்ணினதினால், அவர் எங்களுக்கும் எங்களை நியாயந்தீர்த்த நியாயாதிபதிகளுக்கும் விரோதமாகச் சொல்லியிருந்த தம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றினார் (தானி. 9:11, 12; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

கி.மு. 587 ஆண்டு பாபிலோனியர்கள் எருசலேமை முற்றுகையிடும்போது யூதா இராஜ்ஜியத்தின் முடிவு நெருங் குகையில், எரேமியா துக்கங் கொண்டாடினார். தீர்க்கதரிசி உண்மையை அறிந்து ஆண்டவருடைய எச்சரிப்பின் செய்தியினை கூறினார். அந்த நாட்டை அவர்களுக்கு சுதந்திரமாக கொடுப்பதாக ஆண்டவர் உறுதிமொழி கொடுத்திருந்தும் அவர்களுடைய கீழ்ப்படியாமையினிமித்தம் பேரழிவு யூதாவின் மேல் வரப்போகிறது என எழுதினார்.

> இஸ்ரவேலாகிய உமது ஜனத்தை அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலத்த கையினாலும் ஓங்கிய புயத்தினாலும், மகா பயங்கரத்தினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணி, *அவர்களுடைய பிதாக்களுக்கு நீர் கொடுப்பேன் என்று ஆணையிட்ட* [*shaba'*] பாலும் தேனும் ஓடிய தேசமாயிருக்கிற இந்த தேசத்தை அவர்களுக்குக் கொடுத்தீர். அவர்கள் அதற்குள் பிரவேசித்து, அதைச் சுதந்தரித்துக் கொண்டார்கள்; *ஆனாலும் அவர்கள் உமது சத்தத்துக்குச் செவிகொடாமலும், உமது நியாயப்பிரமாணத்தில் நடவாமலும், செய்யும்படி நீர் அவர்களுக்குக் கற்பித்ததொன்றையும் செய்யாமலும் போனார்கள்; ஆதலால் இந்தத் தீங்கையெல்லாம் அவர்களுக்கு நேரிடப்பண்ணினீர்.* இதோ, கொத்தளங்கள் போடப்பட்டிருக்கிறது; நகரத்தைப் பிடிக்க வருகிறார்கள்; பட்டயத்தினிமித்தமும், பஞ்சத்தினிமித்தமும், கொள்ளை நோயினிமித்தமும் இந்த நகரம் அதற்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிற கல்தேயரின் கையிலே

கொடுக்கப்படுகிறது; நீர் சொன்னபடி சம்பவிக்கிறது; இதோ, நீர் அதைப் பார்க்கிறீர் (எரே. 32:21-24; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

எரேமியாவை போன்ற தீர்க்கதரிசிகள் தங்கள் சமகாலத்தவர்கள் மனந்திரும்பி ஆண்டவரிடம் திரும்பாத பட்சத்தில் அவர்கள் அவர்களுடைய நாட்டை இழந்துப் போவார்கள் என்பதனை எடுத்துக் கூறி அவர்களை திருப்திபடுத்துவதில் கடினமான சமயத்தினை சந்தித்தனர். இந்த யூதர்கள் தற்காலத்தை போன்றே, நாட்டைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் நிபந்தனைக்குட்பட்டதெனும் உண்மையை ஏற்க மறுத்தனர். மக்கள் அவர்களுடைய மூதாதையோடு செய்த வாக்குத்தத்தத்தின் ஒரு பகுதியை கிடுக்கிப்பிடியாக பிடித்துக் கொண்டு அதனை உறுதியானதென வியாக்கியானம் செய்தனர். மோசேயின் சட்டங்களுக்கும் தேவனுக்கும் உண்மையாக இருக்க வேண்டுமென்பதனை அவர்கள் கவனிக்கத் தவறிவிட்டனர்.

2. *சிங்காசன வாக்குதத்தத்திற்கான நிபந்தனையின் இயல்பு.* தேவனுடைய சில வாக்குத்தத்தங்கள் நிபந்தனையற்றதாக தோன்றுகிறது, ஏனென்றால் பிறத்யேகமான நிபந்தனைகள் ஒவ்வொரு சூழலிலும் குறிப்பிடப்படவில்லை. 2 சாமுவேல் 7:16ல் தாவீதினுடைய சிங்காசனத்தை குறித்த தேவனுடைய ஆணை இதை விளக்குகிறது: “உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும். உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்.” தேசம் சீர்கெட்டு அல்லது விக்கிரக ஆராதனைக்காரர்களாக மாறினாலும் அல்லது ஜனங்கள் மோசேயினுடைய உடன்படிக்கைக்கு உண்மையற்றவர்களானாலும், தேவன் எருசலேமை என்றுமே விழவோ அல்லது தாவீதின் ராஜ்யம் முடிவுபெறவோ அனுமதிக்கமாட்டார் என்று அநேக யூதர்கள் நம்ப இந்த அறிக்கை காரணமாயிருந்தது.

சங்கீதம் 89 இந்த பிரச்சனையை விளக்குகிறது. இந்த எழுத்தாளன், தேவன் தாவீதுக்கு கொடுத்த ஆணையில் அவருடைய உண்மைத்தன்மையைப் புகழ்ந்து, இந்த சங்கீதத்தைத் தொடங்குகிறான், “என்னால் தெரிந்துகொள்ளப்பட்டவனோடே உடன்படிக்கைபண்ணி, என் தாசனாகிய தாவீதை நோக்கி: என்றென்றைக்கும் உன் சந்ததியை நிலைப்படுத்தி, தலைமுறை தலைமுறையாக உன் சிங்காசனத்தை ஸ்தாபிப்பேன் என்று ஆணையிட்டேன் என்றீர் (ஷாபா)” [சங். 89:3, 4]. தாவீதினுடைய அழைப்பையும், அவனுடைய அபிஷேகத்தையும், மற்றும் தேவனோடுள்ள உறவையும் நன்கு அறிந்த பிறகு, சங்கீதக்காரன் மறுபடியும் தேவனுடைய வார்த்தையை கூறுகிறான்: “ஒருவிசை என் பரிசுத்தத்தின்பேரில் ஆணையிட்டேன், தாவீதுக்கு நான் பொய்சொல்லேன். அவன் சந்ததி என்றென்றைக்கும் இருக்கும், அவன் சிங்காசனம் சூரியனைப்போல எனக்கு முன்பாக நிலைநிற்கும். சந்திரனைப் போல அது என்றென்றைக்கும் உறுதியாயும்,

ஆகாயமண்டலத்துச் சாட்சியைப் போல் உண்மையாயும் இருக்கும் என்று விளம்பினீர் [ஷாபா]" (சங். 89:35-37).

எனினும், சங்கீதத்தின் இரண்டாம் பகுதியில் நடை வித்தியாசமாக உள்ளது. தேவனுடைய மாறாத அன்பு மாறியது போல் தெரிகிறது; தாவீதோடு ஏற்படுத்திய வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கையின் மேலுள்ள அவருடைய உண்மைத்தன்மையே கேள்விக்குள்ளாகிறது. தேவனால் "அபிஷேகம் பண்ணப்பட்டவன்" (இராஜா) "வெறுத்துத்தள்ளப்பட்டான் மற்றும் நிராகரிக்கப் பட்டான்" (சங். 89:38), மற்றும் அதை செய்யமாட்டேன் என்று தேவன் ஆணையிட்டிருந்த காரியம் நடந்தது: "உமது அடியானுடன் நீர் பண்ணின உடன்படிக்கையை ஒழித்துவிட்டு, அவன் கிரீடத்தைத் தரையிலே தள்ளி அவமானப்படுத்தினீர். அவன் மதில்களையெல்லாம் தகர்த்துப் போட்டு …" (சங். 89:39, 40). சிந்திக்கக் கூடாதது நடந்திருக்கும்: "அவன் மகிமையை அற்றுப்போகப்பண்ணி, அவன் சிங்காசனத்தைத் தரையிலே தள்ளினீர்" (சங். 89:44). இத்துடன், சங்கீதக்காரன் ஒரு சோகமான கேள்வியை உச்சரிக்கிறான்: "ஆண்டவரே, நீர் தாவீதுக்கு உம்முடைய உண்மையைக் கொண்டு சத்தியம்பண்ணின உமது பூர்வ கிருபைகள் எங்கே?" (சங். 89:49).

எருசலேம் விழுந்துபோனதும், தாவீதின் ராஜ்யம் முடிவு பெற்றதும், மேலும் தேவனுடைய ஜனங்கள் தங்கள் தேசத்தை இழந்ததும் நிச்சயமாகவே வருத்தப்படக்கூடியது; ஆனால் இந்நிலையில் சங்கீதக்காரனுடைய புரிந்துகொள்ளுதல் தவறாக உள்ளது ஏனென்றால் அவன் மோசேயின் உடன்படிக்கையை முதன்மையாக பார்ப்பதற்கு மாறாக தாவீதுடைய உடன் படிக்கையை முதன்மையாக பார்த்தான். தேவன் தாவீதுக்கு கொடுத்த ஆணையின் நிபந்தனையின் இயல்பு வேறுபல வேத பகுதிகளில் வெளிப்பட்டிருந்தாலும், இன்று சில யூதர்களும் மறுபிரவேச கிறிஸ்தவர்களும் அதை பரிபூரணமும் மற்றும் நிபந்தனையுமற்றது என்று தவறான கோணத்தில் பார்ப்பது போல சங்கீதக்காரனும் அதே தவறை செய்தான்.

இதற்கு பிரதான எடுத்துக்காட்டு எருசலேம் தேவாலய பிரதிஷ்டையோடு, தேவன் சாலொமோனிடத்தில் சிங்காசனம், ராஜ்யம், தேசம் மற்றும் தேவாலயம் ஆகியவற்றின் வாக்குத் தத்தங்கள் நிபந்தனைக்குட்பட்டது என்று அறிவித்தபோது இணைந்து வெளிப்பட்டுள்ளது. இஸ்ரவேல் ஜனங்கள் யெகோவா தேவனுக்கு உண்மையற்றவர்களாக இருந்து வேறே தேவர்களை சேவிப்பார்களானால் இந்த வாக்குத்தத்தங்களையெல்லாம் இழந்துபோவார்கள் என்று சொன்னார். 1 இராஜாக்கள் 8 ஆம் அதிகாரத்தில் உள்ள சாலொமோனுடைய ஜெபத்திற்கு மறு மொழியாக, கர்த்தர் சொன்னதாவது,

நீ என் சமுகத்தில் செய்த உன் விண்ணப்பத்தையும் உன்

> வேண்டுதலையும் கேட்டேன், நீ கட்டின இந்த ஆலயத்தில் என் நாமம் என்றைக்கும் விளங்கத்தக்கதாக, அதைப் பரிசுத்த மாக்கினேன், என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் அங்கேயிருக்கும் … என் சமுகத்தில் மன உத்தமமும் செம்மையுமாய் உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல நடப்பாயானால் …, உன் தகப்பனாகிய தாவீதோடே நான் சொன்னபடியே, இஸ்ரவேலின் மேலுள்ள உன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்.... நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்னைவிட்டுப் பின்வாங்கி, … வேறே தேவர்களைச் சேவித்து, அவைகளைப் பணிந்து கொள்வீர்களாகில், நான் இஸ்ரவேலுக்குக் கொடுத்த தேசத்திலே அவர்களை வைக்காதபடிக்கு நிர்மூலமாக்கி, என் நாமம் விளங்க நான் பரிசுத்தமாக்கின இந்த ஆலயத்தை என் சமுகத்தைவிட்டுத் தள்ளுவேன், அப்பொழுது இஸ்ரவேல் சகல ஜனங்களுக்குள்ளும் பழமொழியாகவும் வசைச்சொல்லாகவும் இருப்பார்கள் (1 இராஜா. 9:3-7).

தாவீதினுடைய மாம்சீக சிங்காசனத்தினுடைய உலகியல் இயல்பு சங்கீதம் 132:11, 12 இல், தேவனுடைய ஆணை நிலைத்திருப்பது ஜனங்கள் மோசேயின் உடன்படிக்கைக்கு கீழ்ப்படிவதில்தான் இருக்கிறது என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

> உன் கர்ப்பத்தின் கனியை உன் சிங்காசனத்தின்மேல் வைப்பேன் என்றும், உன் குமாரர் என் உடன்படிக்கையையும், நான் போதிக்கும் என் சாட்சிகளையும் காத்து நடந்தால், அவர்கள் குமாரரும் என்றென்றைக்கும், உன் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள் என்றும், கர்த்தர் தாவீதுக்கு உண்மையாய் ஆணையிட்டார், அவர் தவறமாட்டார்.

இந்த வாக்கியத்தில் யெகோவா பயன்படுத்தும் “என்றால்” என்கிற தகுதிச்சுற்று தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் அவருடைய வாக்குத்தத்தங்கள் நிபந்தனையற்றதல்ல என்பதை மெய்ப்பிக்கிறது.

3. *திரும்பி வருவதற்கான வாக்குத்தத்தத்தின் நிபந்தனையின் இயல்பு.* சிறை பிடிக்கப்பட்டவர்கள், சிறையிருப்பின் காலத்திற்கு பிறகு, வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு திரும்புவதை குறித்தும் அங்கே ஒன்று சேருவதைக் குறித்தும், தாவீதின் சிம்மாசனம் மீண்டும் நிறுத்தப்படுவதைக் குறித்தும் பல தீர்க்கதரிசனங்கள் கூறப்பட்டுள்ளது (எசே. 37:1-28; எரே. 23:1-8). இந்நம்பிக்கை, மக்களும் கர்த்தரிடத்தில் திரும்புவதையும் அடிப் படையாகக் கொண்டது. 2 நாளாகமம் 30ல் அதை குறித்த சிறப்பான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேலின் வடக்கு இராஜ்யம் அசீரியர்களால் வீழ்த்தப்பட்டதற்குப் பிறகு, எசேக்கியா, யூதாவிலே சீர்திருத்தங்களை கொண்டு வந்தான். தன் மக்களுக்கும், வடக்குப் பகுதியில் அசீரியர்களால் சிறை பிடிக்கப்படாத யூதர்கள் சிலருக்கும் இடையே ஒற்றுமையை கொண்டு வர நினைத்தான். எசேக்கியா இராஜா இஸ்ரவேலெங்கும் மற்றும்

யூதாவிலும் அஞ்சல்காரர்கள் மூலமாய் கடிதத்தை அனுப்பி, மீதி இருந்த யூத மக்களை எருசலேமில் ஒன்று கூட செய்து, பஸ்காவை ஆசரிக்கும் போது தேவன் தங்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையை புதுப்பித்துக்கொள்ள கேட்டுக்கொண்டான் (2 நாளா. 30:1-5). எசேக்கியா, தன் கடிதத்தில் கூறி இருந்ததாவது,

> இஸ்ரவேல் புத்திரரே, ஆபிரகாம், ஈசாக்கு இஸ்ரவேல் என்பவர்களுடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திரும்புங்கள், அப்போழுது அசீரியருடைய ராஜாக்களின் கைக்குத் தப்பியிருக்கிற மீதியான உங்களண்டைக்கு அவர் திரும்புவார்... இப்போதும் உங்கள் பிதாக்களைப் போல உங்கள் கழுத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள், நீங்கள் கர்த்தருக்கு உடன்பட்டு, அவர் சதாகாலத்துக்கும் பரிசுத்தம் பண்ணின அவருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு வந்து, உங்கள் தேவனாகிய கர்த்தரைச் சேவியுங்கள், அப்பொழுது அவருடைய உக்கிரமான கோபம் உங்களை விட்டுத் திரும்பும், நீங்கள் கர்த்தரிடத்திற்குத் திரும்பினால், உங்கள் சகோதரரும் உங்கள் பிள்ளைகளும் தங்களை சிறை பிடித்தவர்களுக்கு முன்பாக இரக்கம் பெறுகிறதற்கும் இந்த தேசத்திற்குத் திரும்புகிறதற்கும் அது ஏதுவாகும் உங்கள் தேவனாகிய கர்த்தர் கிருபையும் இரக்கமுள்ளவர், நீங்கள் அவரிடத்திற்குத் திரும்பினால், அவர் தம்முடைய முகத்தை உங்களை விட்டு விலக்குவதில்லை (2 நாளா. 30:6-9).

அசீரிய சிறையிருப்பிலிருந்து விடுபடுவது, இராஜ்யத்தின் வடக்கில் இருக்கும் மீதமுள்ள இஸ்ரவேல் மக்களின் மனந்திரும்புதலை அடிப்படையாகக் கொண்டது. அவர்கள் தங்கள் சகோதரராகிய யூதர்களுடன் சேர்ந்து கர்த்தரை ஆராதிக்க விருப்பமுடையவராய் இருக்க வேண்டும். இருப்பினும் எசேக்கிய இராஜாவின் அழைப்பிற்கு மக்களின் பதில் ஏமாற்றத்தை தரக்கூடியதாய் உள்ளது, வேதம் கூறுகிறதாவது:

> அப்படியே அந்த அஞ்சல்காரர் எப்பிராயீம் மற்றும் மனாசே தேசங்களில், செபிலோன் மட்டுக்கும் [வடக்கு இஸ்ரவேல் பகுதிகளில் பழமையான இடங்கள்] ஊரூராகத் திரிந்தார்கள், ஆனாலும் அவர்கள் இவர்களைப்பார்த்து நகைத்து பரியாசம் பண்ணினார்கள், ஆகிலும் ஆசேரிலும், மனாசேயிலும், செபுலோனிலும் சிலர் மனத்தாழ்மையாகி எருசலேமுக்கு வந்தார்கள் (2 நாளா. 30:10, 11).

இந்த சொல்லுக்கு இணங்கி, கையளவான இஸ்ரவேலர்கள் மட்டுமே கர்த்தருக்கு முன் தங்களை தாழ்த்தினர், அதே சமயம், வடக்குப் பகுதியில், மீதியாய் இருந்தவர்களில் பெரும் பாலானவர்கள் மனந்திரும்பி யாவேவினிடத்திற்கு திரும்பு வதற்கான எசேக்கிய இராஜாவின் அழைப்பை இகழ்ந்தனர். இரு இராஜ்யத்திற்குள்ளும் இருந்த நீண்ட விரும்பத்தகாத உறவு, சிறைபிடித்துச் செல்லப்படாத இஸ்ரவேலர்களிடையே அவர்களது இருதயங்களை கடினப்படுத்தி இருக்க வேண்டும், ஆனால் யூதாவோடு மீண்டும் சேர்வதை மறுத்ததால்,

அசீரியாவில் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த தங்கள் சகோதரர்கள் தங்களிடத்திற்குத் திரும்பி யூதாவோடு சேரும் வாய்ப்பை இல்லாமல் செய்துவிட்டது. மேலும், நிலத்திற்கான வாக்குத்தத்தத்தின் நிபந்தனையின் இயல்பையும், சிறையிருப்பிலிருந்து திரும்பின ஆதாரங்கள், உட்பட நாடு கடத்தப்பட்டு, திரும்பிய யூதர்களுக்கான நெகேமி யாவின் ஜெபத்தில் கிடைக்கின்றன:

> நீங்கள் கட்டளையை மீறினால், நான் உங்களை ஜாதிகளுக்குள்ளே சிதறடிப்பேன், என்றும் நீங்கள் என்னிடத்தில் திரும்பி, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களானால், உங்களிலே தள்ளுண்டுபோனவர்கள் வானத்தின் கடையாந்திரத்தில் இருந்தாலும் நான் அங்கே இருந்து அவர்களைச் சேர்த்து, என் நாமம் விளங்கும்படி நான் தெரிந்துகொண்ட ஸ்தலத்துக்கு அவர்களைக் கொண்டு வருவேன் என்றும் தேவரீர் உம்முடைய தாசனாகிய மோசேக்குக் கட்டளையிட்ட வார்த்தையை நினைத் தருளும் (நெதே. 1:8, 9).

இஸ்ரவேல் சிறையிருப்பிலிருந்து திரும்பி தங்கள் நிலத்தை திரும்ப அடைவது, மக்கள் கர்த்தரிடத்தில் திரும்பி அவருடைய கட்டளைகளை பின்பற்றுவதிலேயே அடங்கி இருந்தது. முன்கணிக்கப்பட்டது (எரே. 23; எசே. 37 பார்க்க) சிறியதாயும் ஒரு சார்பாயும் நடந்தது, காரணம், சிறைபிடிக்கப் பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் மனந்திரும்பவில்லை. ஏசாயா இஸ்ரவேலை, "கொள்ளையிடப்பட்டு" "சூறையாடப்பட்டும்," தேவ அழைப்பையும் கேட்டு அவருடைய சட்டத்தை கைக்கொள்ளாத தேவனின் "ஊழியரை," "செவிடு" மற்றும் "ஊமை" என்றும் சித்தரிக்கிறார் (ஏசாயா 41:8; 42:18-22). வேறு வார்த்தையில் கூறினால், பெரும்பாலான மக்கள் தங்கள் துயரமான அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டு தேவனிடத்திற்கு திரும்பத் தவறினார்கள்.

இஸ்ரவேலில் இருந்தும் யூதாவிலிருந்தும் சிறை பிடிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்று நமக்குத் தெறியவில்லை. சிலர், கி.மு. 732ல் திகிலாத்பிலேசர் துவங்கி, கலிலேயாவிலிருந்து யோர்தான் வரையுள்ள இஸ்ரவேலர்களின் மக்கள் தொகையில் பெரும் பகுதியை கடத்திச் சென்றது முதல் (2 இராஜா. 15:29), சிறை பிடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 300,000ல் இருந்து 500,000க்குள் இருக்கலாம் என்று கருதுகிறார்கள். பத்து வருடங்களுக்கு பிறகு, கி.மு. 722ல் சமாரியாவின் வீழ்ச்சியுடன், தேசம் பாழாக்கப்பட்டது. வேதம், அசீரிய இராஜா "இஸ்ரவேலை அசீரியாவிற்கு சிறையாக கொண்டு போய்" என்று கூறுகிறது (2 இராஜா. 17:6). மற்றொரு அசீரிய இராஜாவாகிய சனகெரிப், எசேக்கியா இராஜா அவனுக்கு விரோதமாய் கலகம் பண்ணினதால், இருபது ஆண்டுகளுக்குப் பிறகு தெற்கு இராஜ்யமான யூதாவைப் படையெடுத்தான் (2 இராஜா. 18:7) மற்றும்

மற்ற தேசங்களுடன் பாதுகாப்பு ஒப்பந்தமும் செய்திருந்தான். சனக்கெரிபின் படையினர் அந்நிலத்தை பாழாக்கினார்கள் மற்றும் அவன் தனது வெற்றி விழாவை பல இடங்களின் மேல் கொண்டாடினான். பதிவு கூறுகிறதாவது, யூதாவின் நாற்பத்தாறு நகரங்களை அழித்து 200,000 மக்களை சிறை பிடித்து, எசேக்கிய இராஜாவை எருசலேமிலே[22] "கூட்டில் அடைக்கப்பட்ட பறவை" போலாக்கினான் காண்க (2 இராஜா. 18:13). கி.மு. 701ல் ஏற்பட்ட இந்த முற்றுகையின் போது தலைநகரம் வீழ்த்தப் படவில்லை, எப்படியெனில், எசேக்கியாவின் ஊக்கமான ஜெபத்தினாலும் கர்த்தரின் தெய்வீக இடைப்படுதலாலேயே இவ்வாறு நடந்தது (2 இராஜா. 19:14-35).

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டிற்கு பிறகு, அசீரியாவின் வீழ்ச்சியையும் நேபுகாத்நேச்சர் ஆட்சிக்கு வந்ததையும் தொடர்ந்து, யூதர்கள் பாபிலோனில் சிறைபிடிக்கப்பட்டனர். இது மூன்று நிலையாக நடந்தது. முதலாவது நிலை கி.மு. 605ல் நடந்தது. யோயாக்கீமின் ஆட்சியின் போது, நேபுகாத்நேச்சாரின் படை, தானியேலையும் பல வாலிபர்களையும் எருசலேமிலிருந்து பாபிலோனிற்கு சிறை பிடித்துச் சென்றனர் (2 இராஜா. 24:1-3; தானி. 1:1-4). இரண்டாவது நிலை கி.மு. 597ல் பிடிக்கப் பட்டது, அரச குடும்பமான யோயாக்கீன் இராஜாவும், எருசலேமின் பத்தாயிரம் குடி மக்களும் பாபிலோனிற்கு கொண்டு செல்லப்பட்டனர் (2 இராஜா. 24:8-14). கடைசியான மூன்றாவது கிளர்ச்சி செதேக்கியா இராஜாவின் காலத்தில் கி.மு. 586ல் நடந்தது, அப்போது பாபிலோனியர்கள் எருசலேமையும், அதின் சுவர்களையும், சாலொமோனின் தேவாலயத்தையும் அழித்தார்கள். எதிரிகள், மக்கள் தொகையை குறைத்து, சில ஏழை மக்களை மட்டும் திராட்சை தோட்ட வேலைக்காகவும் பண்ணை வேலைக்காகவும் விட்டுச் சென்றனர். கைப்பற்றியவர்களுக்கு இவர்கள் வரி கட்டவேண்டியதாயும் இருந்தது (2 இராஜா. 25:1-12). இவ்வாறு, நாடு கடத்தப்பட்டவர்களில், பெர்சியர்கள் பாபிலோனை வீழ்த்தி சிறை பிடிக்கப்பட்ட மக்களை விடுவித்து தங்களின் பூர்வ கால வீட்டிற்கு செல்ல அனுமதித்த போது, நமக்கு தெரிந்தவரையில், 10 அல்லது 15 சதவிகிதத்தினரே யூதாவிற்குத் திரும்பினார்கள் காண்க (எஸ்றா 2:64; 8:1-20; நெதே. 2:11, 12).

சிறைப்பிடிக்கப்பட்ட மக்களை விடுவித்து சைரஸ் ஆணையிட்டுக் கொடுத்ததும், மீண்டும் கட்டப்பட்ட தேசத்தின்; மகிமையான தீர்க்கதரிசனம் தாவீதின் மூலம் நிறைவேறியது. ஆனால் தேவன் நினைத்த அளவில் இல்லை, ஏனென்றால் பெரும்பாலான யூதர்கள் திரும்பவில்லை. தேவன் தாவீதோடு ஏற்படுத்திய "நித்திய உடன்படிக்கையின்" ஒருங்கினைப்பு, ஏசாயாவால் இது "தாவீதுக்கு அருளப்பட்ட நிச்சயமான கிருபை" (ஏசாயா 55:3) என்று அழைக்கப்படுகின்றது, "மக்களுக்கு [புறஜாதியார்] தான் ஒரு சாட்சியாக" இருக்க வேண்டுமென்று, சிம்மாசனத்தையும்

இராஜ்யத்தையும் மீண்டும் நிலை நிறுத்த வேண்டியதாய் இருக்கும் (ஏசாயா 55:4). தாவீதின் பல விசுவாசமான போர் வீரர்கள் புறஜாதியார்: இதில் ஏத்தியனான உரியா, தேவனுக்கும் தாவீதுக்கும் உண்மையுள்ளவனாய் இருந்தான் (2 சாமு. 11:3-11), பிலேத்தியர்களான, இராஜாவின் 600 காவலர்கள் (2 சாமு. 15:18-22), மற்றும் மற்ற “வலிமையான மனிதர்கள்” (2 சாமு. 23:8-39; 1 நாளா. 11:10-47). தாவீது தன் எதிரிகளை வீழ்த்தி, பிறகு அவர்களை அனைத்து, கர்த்தருக்கும், தேவன் அபிஷேகித்த தனக்கும் பணிவிடை செய்ய வைப்பான். யூதர்கள், தேவனின் மக்களாய், தாவீதை பின்பற்றி, “தங்களுக்கு அறியப்படாத” தேசத்தை “அழைத்து; ஏசாயா கூறியதைப் போல், “இதோ, நீ அறியாதிருந்த ஜாதியை வரவழைப்பாய், உன்னை அறியாதிருந்த ஜாதி உன் தேவனாகிய கர்த்தரின் நிமித்தமும், இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் நிமித்தமும் உன்னிடத்திற்கு ஓடி வரும், அவர் உன்னை மேன்மைப் படுத்தியிருக்கிறார்” (ஏசாயா 55:5).

தேவ ஜனத்தின் விடுதலை, ஒரு மீட்கப்படும் செயலாகவும், யூத மக்கள் உண்மை தெய்வத்தையே வணங்குகிறார்கள் என்று புறஜாதியார் கண்டு கொண்டு இரட்சிக்கப்படவே நடந்தது. இஸ்ரவேல், தேவனின் “ஊழியர்களாய்,” “யாக்கோபின் கோத்திரத்தை எழும்பப்பண்ணவும், இஸ்ரவேலில் மீதியாய் இருந்தவர்களை திருப்பவும்,” இதோடு கூட, தேவன், “நீர் பூமியின் கடைசிபரியந்தமும் என்னுடைய இரட்சிப்பாய் இருக்கும்படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன் என்கிறார்” (ஏசாயா 49:6). புறஜாதியார், சிறையிருப்பிலிருந்து விடுவித்தது, உடன் படிக்கையின் ஒரு பகுதியாய் சேர்ப்பது, தேவனின் திட்டமாக இருக்கலாம்.

*முடிவுரை.* பூமியைக் குறித்து புதிய ஏற்பாட்டில் எந்த வாக்குத்தத்தமும் தரப்படவில்லை, மற்றும் இயேசுவின் இரண்டாம் வருகையின் போது யூதர்கள் பாலஸ்தீனத்திற்கு செல்வதை குறித்தும் வேதத்தில் எதுவும் கூறப்படவில்லை. சிலர் நம்புவதைப் போல, அவர்கள் குடி உரிமையை பெற்றுக்கொள்வார்கள் என்ற வாக்குத்தத்தமோ, தேவ ஆலயத்தை திரும்ப கட்டுவதை, மோசேயின் உடன்படிக்கையை மிருகங்களின் காணிக்கையினால் உறுதிப்படுத்துதலையோ நாம் காண முடியவில்லை. வேதத்தை இவ்வகையில் வெளிப்படுத்துபவர்கள், எழுத்தின்படியான வார்த்தைகளையே வாசித்து, தீர்க்கதரிசிகளால் இது எந்த சூழலில் கூறப்பட்டுள்ளது என்ற வரலாற்று அர்த்தத்தை கவனிப்பதில்லை. கூறப்பட்டுள்ள சம்பவம், இறையியலின் கடிகாரத்தை பின் நோக்கி பழைய உடன்படிக்கையின் நிழலிற்கு சுழலச் செய்கிறது. மாறாக, புதிய மற்றும் “சிறப்பான உடன்படிக்கையை” பாராட்டி (எபி. 7:22), இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நாம் இப்போது பெற்றிருக்கும் வாக்குத்தத்தங்களை தழுவிக்கொள்ள வேண்டும் (எபி. 7:19-8:13).

தேவன் ஆபிரகாமின் புத்திரருக்கு, நிபந்தனையற்ற அல்லது மாற்ற முடியாத வெகுமதியாகிய கானான் தேசத்தை கொடுக்கவில்லை. இதற்கு எதிர்மறையாக, இஸ்ரவேலர்கள் அங்கு முதலாக இருந்ததில்லை, அவர்கள் எப்போதுமே "அந்நியர்களாயும்" "குடியிருப்பவர்களாயும்" மட்டுமே தேவனுடைய நிலத்தில் இருந்தார்கள் (லேவி. 25:23, 1 நாளா. 29:15). தேவனுக்கு யூதர்களின் தலைவர்களிடமிருந்து கிட்டிய மிகப்பெரிய அவமதிப்பு என்னவென்றால், தங்களையும் மனுக்குலத்தையும் காக்க வந்து-தங்களை பாவங்களிலிருந்து மீட்க வந்த இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்ததே. "தேவ இராஜ்யத்தில்" பிரவேசிக்க "ஜலத்தினாலும் ஆவியினாலும்" புதிய வாழ்க்கையை பெற வேண்டும் என்பதை அறிய, அவர்களை பெருமையும் அகந்தையுமே தடுத்தது (யோவான் 3:3-5; மாற்கு 1:4; லூக் 3:3 பார்க்க).

பெரும்பாலும், தேவ இராஜ்யத்தை குறித்து யூதர்களின் பார்வை, உலகம் சார்ந்ததாயும், குறுகினதாயும், தேசம் சார்ந்ததாயும் இருந்தது. அதிகாரத்தில் உள்ளவர்கள், இயேசுவை, மோசேயின் சட்டத்தை குலைப்பவராயும் தெய்வ குற்றஞ்செய்யும், தன்னை தானே தேவ குமாரன் என்று சொல்லிக் கொள்பவராயும் பார்த்தனர். அவர்கள் அவரை கள்ள மேசியா என்றும், தாவீதின் மக்களை தங்கள் நம்பிக்கைக்கும் கனவுகளுக்கும் தீனி கொடுத்து அவர்களை தவறான வழியில் கொண்டு செல்பவராகவும் கருதி பயந்தார்கள். இத்தகைய செயல் ரோமின்; கோபத்தை கொண்டு வரும் என்றும் யூத தலைவர்கள் கட்டாயமாக அறிந்திருந்தார்கள். அதினால் தங்கள் பதவி அல்லது உயிரே போகக்கூடிய நிலை இருந்தது (யோவான் 11:47-53). தங்கள் இருதயக் கடினத்தினால் அவர்கள் அரசியல் சூழ்ச்சி மூலம் தேவ குமாரனை கொலை செய்ய ஒப்புக் கொடுத்தார்கள்.

எனினும், இஸ்ரவேல் மக்களுக்கு இன்னமும் நம்பிக்கை இருப்பதாக பவுல் கருதுகிறார். அப்போஸ்தலன், அவர்களை தேவனின் ஒலிவ மரத்தின் கிளைக்கு (அவரது இராஜ்ஜிய மக்கள்) ஒப்பிடுகிறார், அவர்கள் தங்களின் அவ்விசுவாசத்தினால் வெட்டப்பட்டதையும், புறஜாதியார் விசுவாசத்தினால் மரத்தில் ஒட்டப்படுவதையும் விவரிக்கிறார் (ரோமர் 11:17-20). ஆக, தேவனின் "இரக்கத்தின்" அடிப்படையில், யூதர்கள் விசுவாசத்தால் கீழ்ப்படிந்தால், அவர்களும் தேவனுடைய மரத்தில் "ஒட்டப் படுவார்கள்," அதினால் இரட்சிக்கப்படுவார்கள் (ரோமர் 11:22-27).

பவுல், முன்பு, ஆபிரகாமிற்கு வாக்களிக்கப்பட்ட, நாட்டுப் பற்றான, யூத இராஜ்யத்தை குறித்த அரசியல் ரீதியான மீட்பைக் குறித்து விவாதிக்கவில்லை. பவுலோ அல்லது மற்ற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களோ இத்தகைய காரியங்களையும் கோட்பாடு களையும் கூறும் கருத்துக்கள் வேதத்திற்கு புறம்பானது என்று கூறுகின்றார்கள்.

## இறுதிக் குறிப்புகள்

[1]J. Jeremias, "נָבִיא," in *Theological Lexicon of the Old Testament*, trans. Mark E. Biddle, ed. Ernst Jenni and Claus Westermann (Peadbody, Mass.: Hendrickson Publishers, 1997), 2:703. [2]தேவன் முதலில் ஊரில் அழைத்த போது, ஆபிரகாம் 35 வயதாய் இருந்திருக்கலாம். 12:4 மற்றும் 16:3ன் படி, அவன் 85 வயதை நெருங்கி இருக்கலாம். ஆக, ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் கடந்தும் அவனுக்கு அவன் சந்ததியை வளர்க்க குழந்தை இல்லாதிருந்தது. [3]தமஸ்கு வழியாக ஆரானிலிருந்து கானானுக்கு செல்லும் பயணத்தில் இந்த வேலைக்காரனை பெற்றிருக்கலாம் (12:4, 5 விளக்கம் காண்க). [4]"என் சொத்துக்களை அனுபவிப்பவன்" என்று NIV கூறுகிறது. [5]Victor P. Hamilton, "מֶשֶׁק," in *TWOT*, 1:535. [6]Alfred J. Hoerth, *Archaeology and the Old Testament* (Grand Rapids, Mich.: Baker Books, 1998), 102–103. [7]Alfred Jepsen, "אָמַן," in *Theological Dictionary of the Old Testament*, trans. John T. Willis, ed. G. Johannes Botterweck and Helmer Ringgren (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1974), 1:308. [8]Deryck C. Sheriffs, "Faith," in *Dictionary of the Old Testament: Pentateuch*, ed. T. Desmond Alexander and David W. Baker (Downers Grove, Ill.: InterVaristy Press, 2003) 281–82. [9]சில NASB அச்சடிப்புகள் "ஏற்றுக்கொள்" என்று சங்கீதம் 1:6ன் பக்கக்குறிப்பில் கூறப்படுகிறது, ஆமோஸ் 3:2ல் அவ்வார்த்தை "தெறிந்தெடுப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எழுத்தின்படி யாடா என்றால் உடல் ரீதியாகவோ (4:1) அல்லது ஆவிக்குரிய ரீதியாகவோ (ஓசியா 2:20) "அறிந்து கொள்வது" என்று அர்த்தம். [10]Kenneth A. Mathews, *Genesis 11:27—50:26*, The New American Commentary, vol. 1B (Nashville: Broadman & Holman Publishers, 2005), 170.

[11]Erica Reiner, trans., "Treaty Between Ashurnirari V of Assyria and Mati'ilu of Arpad," in *Ancient Near Eastern Texts Relating to the Old Testament*, 3d ed., ed. James B. Prichard (Princeton, N.J.: Princeton University Press, 1969), 532. [12]Franz Rosenthal, trans., "The Treaty Between *KTK* and Arpad," in *Ancient Near Eastern Texts*, 660. [13]மெசப்பொத்தோமியாவில் வாழ்ந்த மக்கள், சிரியா, லெபனான் மற்றும் பாலஸ்தீனத்தில் (கானான்) வாழ்ந்த மக்களை (அம்மோரைட்ஸ், "மேற்கத்தியர்கள்") என்று அழைத்தார்கள், பின் இனத்திற்குப் பொதுவான வார்த்தையாக பழைய ஏற்பாட்டில் பல முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. (A. H. Sayce and J. A. Soggin, "Amorites," in *The International Standard Bible Encycolpedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979], 1:113–114.) [14]பின், சோதோம் மற்றும் கொமோரவின் கூக்குரல் பெரிதாய் இருந்தது, புறஜாதியின் கூக்குரலும் சேர்ந்துகொண்டது. கர்த்தர் அதை பொறுக்க முடியாமல், அவர்களுக்கு விரோதமாய் நீதி விசாரிக்க தீர்மானித்தார் (18:20, 21). அதன் பிறகும், கர்த்தர் ஆபிரகாமிடம், பத்து நீதியுள்ள மனுஷர்கள் இருந்தால் சோதோமை அழைக்க மாட்டேன் என்று வாக்களித்தார் (18:32). [15]John T. Willis, *Genesis*, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1979), 239. [16]R. K. Harrison, "Brook of Egypt," in *The International Standard Bible Encyclopedia*, 1:549. [17]எண்ணாகமம் 34:5 மற்றும் யோசுவா 15:4ல், (נַחַל, *nachal*) யெஉக்யட- "எகிப்தின் ஆறு" என்பதும் மற்றும் ஆதியாகமம் 15:18ல் (נָהָר, *nahar*) "எகிப்தின் நதி" என்பதும் வெவ்வேறு எபிரெயப் பதங்கள் உபயோகப்படுத்தப்பட்டாலும் இவை ஒன்றாக இருக்கலாம். [18]Matthews, 177. [19]ஆபிரகாம் "ஆரானை விட்டு புறப்பட்டபோது, எழுபத்தைந்து வயதாயிருந்தான்" (12:4), 16:3ன் போது, கானானில் 10 வருடங்கள் வாழ்ந்திருந்தான். அவன் தரிசனம் பெற்றபோது, தனது 80களில் இருந்திருக்கலாம். 16:16ல் ஆகார் இஸ்மவேலை பெற்றபோது 86 வயதாய் இருந்தான். [20]மத்தேயு 1:20; 10:31; 28:5; லூக்கா 1:13, 30; 2:10; 5:10; 8:50; 12:7, 32; அப்போஸ்தலர் 27:24; வெளிப்படுத்தின விசேஷம் 1:17 ஆகியவற்றை காண்க.

[21]இக்கருத்திற்கு மாற்றுக் கருத்து என்னவென்றால்: Walter C. Kaiser, Jr., *Toward Rediscovering the Old Testament* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1987), 150–55; Ronald B. Allen, "The Land of Israel," in *Israel: The Land and the People*, ed. H. Wayne House (Grand Rapids, Mich.: Kregel Publications, 1998), 24–28; and Craig A. Blaising and Darrell L. Bock, *Progressive Dispensationalism* (Wheaton, Ill.: Victor Books, 1993), 132–35. [22]A. Leo Oppenheim, trans., "The Annals of Sennacherib," in *Ancient Near Eastern Texts*, 288.